வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 14.10.2023 சனிக்கிழமை | இதழ் : 308 | பக்கங்கள் : 16




## பொது முடக்க அறிவிப்பை கட்சிகள் மீளப்பெற வேண்டும்!

### மறவன்புலவு சச்சிதானந்தன்



யாழ்ப்பாணம், ஒக். 14

பொது முடக்கத்துக்கு விடுத்த அழைப்பை மீளப் பெறவேண்டும் என்று ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச் சிதானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கை அப் படியே வருமாறு,

“குபேரர்களுக்குக் குடிசை மக்களின் துன்பம் தெரியாது.

11

## சொந்தநலனுக்காக மாகாண சபையின் அதிகாரங்களை மழுங்கடிக்கக்கூடாது!

### வட மாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சி தலைவர்



யாழ்ப்பாணம், ஒக். 14

13ஆவது திருத்தச் சட் டத்தை முழுமையாக அமு லாக்கும் சூழல் ஏற்பட் டுள்ளது. போராளிகளின் தியாகங்களால் ஏற்படுத் தப்பட்ட மாகாண சபை முறைமையை தங்கள் சொந்த நலன்களுக்காக மழுங்கடித்து விடக் கூடாது என்று சுட்டிக் காட்டியுள்ளார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சி தலைவர் சி. தவராசா.

11

# இந்து ஆலயங்களை அழித்து வடக்கு, கிழக்கில் விகாரைகள்!

## புதிய தகவல் அறிக்கையை பிரிட்டன் அமைச்சரிடம் வழங்கினார் சிறீதரன்

• பாராளுமன்றில் புதனன்று சமர்ப்பிப்பார்!



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 14

**வடக்கு - கிழக்கில் அண்மையில் புதிதாக 80 விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விகாரைகளில் சில இந்து ஆல யங்கள் அழிக்கப்பட்டு - அவை இருந்த இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன - இவ்வாறு குறிப்பிட்டு பிரிட்டனின் அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியனிடம் அறிக்கை ஒன்றை கையளித்துள் ளார் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் எம்.பி.**

11



## பொன். செல்வராசா நேற்று காலமானார்!

மட்டக்களப்பு, ஒக். 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவருமான பொன். செல்வராசா (வயது 77) மட்டக்களப்பில் நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

உடல்நல குறைவு மற்றும் வயது மூப்பினால் அவர் உயிரிழந்தார். அன்னாரின் உடல் மட்டக்களப்பு நகரில் உள்ள அவரின் வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

11

## பொலிஸ் மா அதிபரின் பதவிக் காலம் நீடிப்பு!

கொழும்பு, ஒக். 14

பொலிஸ் மா அதிபர் சி. டி விக்ரமரத்னவின் பதவிக் காலம் மேலும் 3 வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பொலிஸ் மா அதிபர் பதவிக் காலம் மேலும் 3 வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது.

சி. டி. விக்ரமரத்னவின் பதவிக்காலம் இதற்கு முன் னர் இரண்டு முறை, தல 3 மாதங்கள் என்ற அடிப் படையில் நீடிக்கப்பட்டது. இதனை அரசமைப்பு

11

## குப்பைக்கு வைத்த நெருப்பு ஆடையில்பற்றி பெண் பலி!

யாழ்ப்பாணம், ஒக். 14

வீட்டில் குப்பைக்கு வைத்த நெருப்பு ஆடை யில் பற்றியதில் பெண் ஒருவர் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

தென்மராட்சி - சாவகச்சேரி - சங்கத்தானையை சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயான சுகந்தன் தயாபரி (வயது-37) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த பெண், கடந்த 7ஆம் திகதி

11

## நாகபட்டினம் - காங்கேசன் கப்பல் சேவை இன்று ஆரம்பம்!

சென்னை, ஒக். 14

நாகபட்டினம் - காங்கேசன்துறை இடையே பயணி கள் கப்பல் போக்குவரத்து சேவையை மத்திய வெளியுற வுத்துறை அமைச்சர் மற்றும் துறைமுகங்கள், கப்பல் நீர்வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் ஆகியோர் இன்று சனிக்கிழமை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

நாகை துறைமுகத்தில் இருந்து காங்கேசன் துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து கடந்த 10ஆம் திகதி தொடங்கப்படும் என்று

11

## காசாவின் தற்போதைய நிலவரம் இலங்கை போரை நினைவூட்டுகிறது!

### பிரபல பத்திரிகையாளர் மார்க் சோல்டர்

ஒஸ்லோ, ஒக். 14

காசாவில் தற்போது இடம்பெறும் சம்பவங்கள் இலங் கையின் இறுதி போரின் ஆரம்ப தருணங்களை நினைவு படுத்துகின்றன என்று பத்திரிகையாளரும் ஆய்வாளரும் எழுத்தாளருமான மார்க் சோல்டர் தெரிவித்துள்ளார்.

“இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்பு“ ன்ற நூலை எழுதிய மார்க் சோல்டர் தனது எக்ஸ் (ருவிற்றர்) பதிவில் மேற்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், காசாவில் தற்போது இடம்பெறும்

11

## ரயிலில் ஏறியபோது தவறி விழுந்தவர் உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம், ஒக். 14

ரயிலில் ஏற முற்பட்டபோது தடுமாறி தண்ட வாளத்தில் விழுந்த முதியவர் உயிரிழந்தார்.

தச்சன்தோப்பு ரயில் நிலையத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் தென்மராட்சி - சாவகச்சேரி - சங்கத்தானையை சேர்ந்த மாணிக்கம் விஜயரட் ணம் (வயது-69) என்பவரே உயிரிழந்தார்.

இவர், கடந்த 8 ஆம் திகதி இரவு தச்சன்தோப்பு ரயில் நிலையத்தில் ரயிலில் ஏற முயன்றபோது தடுமாறி கீழே விழுந்தார்.

சாவகச்சேரி மருத்துவமனையில்

11

### நியூசிலாந்தில் இன்று தேர்தல்:

## தேசிய கட்சியின் பட்டியல் வேட்பாளராக ஈழத் தமிழர்!



வெலிங்டன்,ஒக்.14

நியூசிலாந்தில் இன்று சனிக் கிழமை தேர்தல் நடை பெறுகிறது. இந்தத் தேர்தலில் தற்போது எதிர்க் கட்சியாக உள்ள தேசிய கட்சியின் தேசியப் பட்டியல் வேட்பாளராக ஈழத் தமிழரான அருளானந்தம் செந்தூரன் நியமிக்கப்பட்டுள் ளார்.

நியூசிலாந்தில் நடக்கும் தேர்தலில் முன்னாள் பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் பிரதிநிதித்துவப் படுத்திய ஆளும் தொழில் கட்சிக்கும் எதிர்க்

11

## இப்படியும் நடக்கிறது

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து தமிழ் மக்களின் நிலைகள் குறித்து தெளிவுபடுத்தி தீர்க்கமான முடிவொன்றை எட்டுவதற்கு தமிழ்த் தேசிய கட்சிகளைச் சேர்ந்த ஏழு கட்சிகள் இணைந்து கடிதம் ஒன்றை அனுப்பத் தயாராக உள்ளோம் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கிறார் என்ற செய்தி எமது வாசகர்கள் அறிந்தது தான்.

சில வாரங்களுக்கு முன்னர் தான் விக்னேஸ்வரன் ஐயா, மோடியை ஒருமித்து சந்திப்போம், இந்தியாவில் அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற விருப்பதால் இந்தத் தருணத்தில் நாம் அவரை சந்திப்பது நல்லது என்ற தொனியில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அதாவது ஈழத்தமிழர் பிரச்னையில் பிரதமர் மோடி தலையிட்டு ஒரு தீர்வைக் கொடுத்தால், அது தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சிக்கு சாதகமாகும் என்றும் அதனால் இந்த நேரத்தில் மோடியைச் சந்திப்பது நல்லது என்ற தொனியிலும் அமைந்திருந்தது விக்கி ஐயாவின் கோரிக்கை.

ஆனால், அவரின் கோரிக்கையை எந்தவொரு தமிழ்த் தேசியக் கட்சியும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

அப்படி யாரும் கண்டுகொள்ளாத போதிலும் ஐயா தொடர்ந்து முயற்சித்து, இப்போது ஏழு கட்சிகளும் பிரதமர் மோடியைச் சந்திக்க நேரம் கேட்டு கடிதம் எழுதுவது என்ற இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கின்றன.

பிரதமர் மோடியை சந்தித்து தமிழர் நிலைகள் குறித்து தெளிவுபடுத்தி, தீர்க்கமான முடிவு ஒன்றை எட்டவிருப்பதாக அவர் சொல்லியிருப்பதுதான் யாருக்கும் புரிந்திருக்குமோ தெரியவில்லை.

ஈழத்தமிழர் விவகாரத்தில் தீர்க்கமான முடிவை எடுப்பதற்கு இந்தியப் பிரதமர் மோடிக்கு தமிழ் மக்கள் ஆணையைக் கொடுத்திருக்கிறார்களா?.

ஈழத்தமிழர் பிரச்னைக்கு இலங்கையின் அரசியலமைப்பில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பயனாக கொண்டு வரப்பட்ட பதின்மூன்றாவது திருத்தம்- அதாவது மாகாண சபை அதிகாரம்தான் தீர்வு என்பதை இந்தியா பல தடவை திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டது.

'அதற்கு மேலே ஈழத்தமிழர்கள் அதிகாரத்தை பெற்றால் எமக்கு சந்தோசம்தான். ஆனால், பதின்மூன்றை அமுல்படுத்து கின்றது வரை நாங்கள் உங்களோடு இருப்போம்' என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், தன்னைச் சந்தித்த தமிழ் கட்சிகளின் தலைவர்களுக்கு தெளிவாகவே கூறியுமிருந்தார்.

இந்நிலையில், பிரதமர் மோடியை சந்தித்து தீர்க்கமான முடிவு எடுப்பது என்பது பதின்மூன்றை அமுல்படுத்துகின்ற விடயத்தில் இலங்கையின் இழுத்தடிப்புக்களுக்கு முடிவு கட்டுவது என்பதுதான் என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

இவ்வேளையில், தமிழ் கட்சிகள் எல்லாம் ஆகக்குறைந்தது, விக்னேஸ்வரன் ஐயா குறிப்பிடும் ஏழு கட்சிகளும் எதனை வலியுறுத்தி மோடியைச் சந்திக்க விரும்புகின்றன என்பது குறித்து தீர்மானமான ஒரு முடிவுக்கு வரவேண்டுமா?

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்குவது பற்றி இலங்கை அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டதும், நமது தலைவர்கள் முண்டியடித்துக் கொண்டு அதனை எதிர்ப்பதும் அதற்கு அனுமதி வழங்கக் கூடாது என்று கோரிக்கை விடுவதையும் காணமுடிகின்றது.

இந்திய மீவர்கள் மீன்பிடிப்பதற்கு எந்த வகையில் அனுமதி வழங்கப்படும் என்பதையோ அல்லது அதுகுறித்த விவரங்களையோ இலங்கை அரச தரப்பு வெளியிடுவதற்கு முன்னதாகவே நமது தலைவர்கள் முண்டியடித்துக்கொண்டு அதற்கு எதிர்வினையாற்றுகின்றனர்.

இந்திய மீனவர்கள் நமது கடலில் மீன்பிடிப்பதையோ அல்லது இந்தியக் கடலில் நமது மீனவர்கள் மீன்பிடிப்பதையோ யாரும் கண்டித்ததாக தெரியவில்லை. நமது பிரச்னையே நமது கடலில் நாம் தடை செய்து வைத்திருக்கின்ற 'இழுவைமடி' மீன்பிடியையே நாம் எதிர்த்து வருகின்றோம். அதைவிடுத்து நமது கடலில் மீன்பிடிப்பதையே எதிர்க்கிறோமா என்பது தெரியவில்லை. நமது கடலில் சீன நிறுவனங்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டபோது தெற்கில் யாரும் அதற்கு எதிராகக் குரல் கொடுத்ததாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் நாம் தடை செய்து வைத்திருக்கின்ற எந்த வகையான மீன்பிடியிலும் ஈடுபடுவதில்லை. அதற்கான அனுமதியும் வழங்கப்படுவதில்லை.

எனவே, இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு எந்தவகையான அனுமதியை வழங்க இலங்கை அரசு யோசனை செய்கின்றது என்ற தகவல் கிடைக்கு முன்னரே நாம் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதி வழங்கக்கூடாது என்று குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டோம்.

முதலில் நமது பிரச்னைகளுக்கு இந்தியாவை அணுகுவதற்கு முன்னதாக, இதுபோன்ற விடயங்களில் எமது தெளிவான கொள்கை என்ன? நாம் இந்தியாவை அதன் உதவியை நாடுகின்ற அதேவேளை, அவர்களுக்கு எம்மால் என்ன செய்ய முடியும் என்பதிலும் நாம் எம்மிடையே ஒத்த கருத்தோடு இருக்க வேண்டுமா?

-ஊர்க்குருவி.

இஸ்ரேல் - பலஸ்தீன போர்:

# ஐ. நா. சபை இரட்டை நிலைப்பாடு வகிக்கூடாது என்று ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஒக். 14

இஸ்ரேல் - பலஸ்தீன மோதலில் ஐக்கிய நாடுகள் இரட்டை நிலைப்பாட்டை வகிக்க வேண்டாம் என்று வலியுறுத்தி புதிய மக்கள் முன்னணி நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பணிமனை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு கோஷங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியிருந்தனர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மனு ஒன்றையும் ஐ. நா. பணிமனையின் பிரதிநிதியையும் வழங்கினர். (ஐ)




# மக்கள்மீது புதிய வரிகளை சுமத்துவதற்கு முடியாது!

## ஜனாதிபதி தெரிவித்தாரென நிதி இராஜாங்க அமைச்சர்!

கொழும்பு, ஒக்.

மக்கள் மீது புதிய வரிகளை சுமத்த முடியாது என ஜனாதிபதி தெரிவித்தாரென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அரச வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில், வருமானம் ஈட்டும் திணைக்களங்களின் பிரதானிகளுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இராஜாங்க அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

வருமானம் ஈட்டும் திணைக்களங்களின் வருமான இலக்குகளை விரைவுபடுத்தும் நோக்கில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வருமானத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அரசாங்கம் வருமானத்தை அதிகரிக்க விரைவாக வருமான இலக்குகளை நோக்கி நகர வேண்டுமென இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், நாட்டு மக்கள் மீது புதிய வரிகளை சுமத்த முடியாது எனவும், தற்போதுள்ள முறையில் வருமான வரி செலுத்தாதவர்களிடம் இருந்து அதிகமான தொகையை வசூலிக்க வேண்டிய தேவை இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (ஐ)

# ரத்ன தேரரை கட்சியிலிருந்து நீக்கும் தீர்மானம் முரணானது

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஒக். 14

பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரரை "எங்கள் மக்கள் சக்தி" கட்சியில் இருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துரலியே ரத்ன தேரர் தாக்கல் செய்த மனு மீதான அவிசாரணை முன்னெடுக்கப்பட்ட நிலையில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீதியரசர்களான புவனேக அலுவிஹார, முர்து பெர்னாண்டோ மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற அமர் வில் குறித்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அத்துரலியே ரத்ன தேரர் தலைமையிலான கட்சி எங்கள் மக்கள் சக்தி கட்சியுடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறி ஒழுக்காற்று குழுவால் அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு இல்லை என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ஐ)

# ராகுல் காந்தியிடம் மிலிந்த பிரியாவிடை பெற்றார்!

புதுடில்லி, ஒக். 14

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட தனது சேவைக் காலத்தை முடித்துக் கொண்டு விரைவில் நாடு திரும்ப உள்ள நிலையில் காங்கிரஸ் கட்சியின் எம்.பியான ராகுல் காந்தியிடம் பிரியாவிடை பெற்றுள்ளார்.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட, டெல்லியில் தனது பதவிக்காலத்தை விரைவில் நிறைவு செய்யவுள்ளார். இன்னும் சிலநாட்களில் அவர் பதவிக்காலம் நிறைவடைந்து நாடு திரும்பவுள்ளார்.

சேவையிலிருந்து திரும்பும் அறிவிப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிலிந்த மொறகொட உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

முன்னாள் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மிலிந்த மொறகொட இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை பலப்படுத்துவது மற்றும் வளர்ப்பது ஆகியவற்றில் அவர் முக்கிய பங்கை ஆற்றியுள்ளார்.

குறிப்பாக இலங்கை மற்றும் இந்தியாவின் மின்சார கட்டங்களை ஒன்றுடன் ஒன்று இணைப்பது போன்ற முயற்சிகளில் ஈடுபட்டு இந்தியாவுடனான உறவை மேம்படுத்துவதில் விரிவான மூலோ பாயத்தை தன்னுடைய காலத்தில் உருவாக்கியுள்ளார்.

இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு முன் இந்திய தேசிய காங்கிரஸின் பணிமனையில் ராகுல் காந்தி எம்.பி. மொறகொடவுக்கு பிரியாவிடை அளித்தார். ஏற்கனவே, இந்தியாவின் முக்கிய அரசியல் தலைவர்களை சந்தித்து மொறகொட பிரியாவிடை பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
14.10.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ்த் தேசிய இணக்கப்பாட்டுக்கான மகாநாடு

நேற்றைய ஆசிரியர் தலையங்கத்தில் இஸ்ரேலை முன்வைத்து சில விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தோம். நெருக்கடியின்போது – எவ்வாறு கட்சி பேதங்களைக் கடந்து சிந்திப்பது, செயல்படுவது என்பது தொடர்பான ஆலோசனையாகவே அந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தோம். நாம் தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் கட்சிகளை நோக்கி குறிப்பிட்ட விடயத்தை – அதே விடயத்தை –தற்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர் கட்சிகளை நோக்கி குறிப்பிட்டிருக்கின்றார்.

சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க ஆகியோரை நோக்கியே இந்தக் கோரிக்கையை அவர் முன்வைத்திருக்கின்றார். ‘ஈழநாடு’ பல்வேறு விடயங்களில் முன்னோடியாக இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டு வதற்காகவே இந்த விடயத்தை சுட்டிக்காட்டுகின்றோம் – மற்றும்படி ரணில் கூறுவது வேறு – நாங்கள் கூறுவது வேறு. தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்னைகள் தீர்க்கப்படாத நிலையில் தமிழ் மக்களை பொறுத்தவரையில், தேசிய நல்லிணக்க கோரிக்கை பயனற்றது.

‘ஈழநாடு’ ஒரு விடயத்தை உறுதியாக முன்வைக்கின்றது. நாம் தமிழ்த் தேசிய நல்லிணக்கம் நோக்கி முன்னேற வேண்டும். அது ஒன்றுதான் பிரச்னைகளை எதிர்கொள்வதற்கான ஒரே வழியாகும். உலக அரசியல் பரப்பு வேகமாக மாறிவருகின்றது. அந்த மாற்றங்கள் நமக்கு நன்மையையும் கொண்டுவராலாம் தீமையையும் கொண்டுவரலாம். எது எப்போது நிகழும் என்பதை நம்மால் கணிக்க முடியாது. ஆனால், எவ்வாறான சூழ்நிலைகளை யும் எதிர்கொள்வதற்கான உள்ளகக் கட்டமைப்பு நம்மிடம் இருக்கவேண்டும்.

இன்றைய சூழலில் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பானது வெறும் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கான களமாகவே இருக்கின்றது. ஆளுமை உள்ள வர்கள் பாராளுமன்றத்தில் அவ்வப்போது பேசிக் கொண்டிருக்க – இன்னும் சிலரோ என்ன பேசுவதென்றே தெரியாத நிலையில் – நாங்களும் இருக்கின் றோம் என்பதை குறிப்பிடுவதாக ஏதோ பேசிக் கொண்டிருக்கின்றனர். உண் மையில் தமிழ்த் தேசிய அரசியல் – என்று நாம் அழைத்துக் கொண்டாலும்கூட அவ்வாறு அழைப்பதற்கான புறச்சூழல் நம்மிடமில்லை என்பதுதான் உண்மை.

விடுதலைப் புலிகள் அமைப்பு, தமிழர் அரசியல் அரங்கிலிருந்து அகற்றப் பட்டு பதினான்கு வருடங்களாகி விட்டன. இந்த பதினான்கு வருடங்களில் தமிழ் கட்சிகளின் நிலை என்னவென்று நோக்கினால் – பதில் இலகுவானது – அதாவது, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை. மேலும்மேலும் தங்களை தேர்தல் சண்டைக்கு தயார்படுத்துவதைத் தவிர, தமிழ்த் தேசிய பரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளிடம் எந்தவொரு முன்னேற்றகரமான நகர்வுகளையும் காண முடியவில்லை. இந்த அடிப்படையில் நோக்கினால், அரசாங்கத்தோடு இணைந்து செயல்படும் தமிழ் கட்சிகளும் தமிழ்த் தேசிய கட்சிகள் என்போருக்கும் இடையில் காணப்படும் வேறுபாடு ஒன்றுதான். அவர்கள் அமைச்சரவையில் இருக்கின்றனர் – இவர்கள் அதில் அங்கம் வகிக்கவில்லை.

இந்த விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்தியதன் காரணமாகவே ‘ஈழநாடு’ இந்த பரிந்துரையை முன்வைக்கின்றது. இப்போது தமிழ்த் தேசிய பரப்பில் தேவையான – அடிப்படையான விடயம் ஒன்றுதான். அதாவது, தமிழ்த் தேசிய நல்லிணக்கத்தை நோக்கி தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித் துவப்படுத்துவதாகக் கூறும் அனைவரும் செயலாற்ற வேண்டும். இவ்வா றானதொரு நல்லிணக்கத்துக்கான மாபெரும் தமிழ்த் தேசிய மகாநாடு ஒன்றை ஒழுங்கு செய்ய வேண்டும். தமிழ்த் தேசிய நல்லிணத்கத்தில் உடன் பாடுள்ள அனைத்து தரப்புகளையும் அழைக்க வேண்டும். 13ஆவது திருத்தச சட்டம் முழுமையான தீர்வல்ல. ஆனால், இன்றைய சூழலில் அதனை ஆரம்பப் புள்ளியாகக் கொள்ள வேண்டியது தவிர்க்கவே முடியாதென்னும் நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். இந்தியாவை நோக்கி பிரகடன மொன்றை முன்வைக்க வேண்டும். இந்த விடயத்தில் – 1987 போல் இந்தியா நேரடியான தலையீட்டை செய்ய வேண்டுமென்று வலியுறுத்த வேண்டும். இந்தியா தலையிடுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா – அல்லது இல்லையா என்பதற்கப்பால், நாங்கள் எங்களுடைய நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். இந்த தமிழ்த் தேசிய நல்லணக்கத்துக்கான மகா நாட்டுடன் உன்படாதவர்கள் எவரோ – அவர்கள் தமிழ் மக்களின் நலன்களில் அக்கறையில்லாதவர்கள் என்பதை மக்கள் உணர்ந்து கொள்வார்கள்.

# இஸ்ரேலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 14

இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையில் இடம்பெற்று வரும் போரை நிறுத்த வலி யுறுத்தியும் இஸ்ரேலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்ட மொன்று முன்னெடுக்கப் பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு-7 இல் அமைந் துள்ள தெவட்டகஹ வத்த பள்ளிவாசலுக்கு அருகில் இடம்பெற்றது.

இதன்போது, “இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்துக்கும் இடையில் இடம்பெற்று வரும் போருக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் பலஸ் தீன மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும், இஸ் ரேல் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக வும்” ஆர்ப்பாட்டக்காரர் கள் தெரிவித்தனர்.




ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உள் ளிட்ட பலர் கலந்துக் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ‘நினைவழியா நாட்கள்’ நூல் ஜேர்மனியில் அறிமுக விழா!

டோட்மூண்ட், ஒக். 14

தமிழீழ விடுதலைப் புலி கள் அமைப்பின் ஆரம்ப காலத்தில் தேசியத் தலைவ ரால் இளமாறன் என புனை பெயர் சூட்டப்பட்ட குலம் எழுதிய ஹநினைவழியா நாட்கள்ஹ நூலின் அறிமுக விழா ஜேர்மனியில் நடை பெற்றது.

டோட்மூண்ட் (Dontm unt) நகரத்தின் தமிழர் அரங்கம் மண்டபத்தில் கடந்த 8ஆம் திகதி நடை பெற்றது.

கடந்த ஆண்டு சுவிற்சர் லாந்தில நடைபெற்ற வெளி யீட்டு விழாவை தொடர்ந்து இந்த நூலின் அறிமுக விழாக்கள் இங்கி லாந்து, பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளில் நடை பெற்றன.



இதன் தொடர்ச்சியா கவே ஜேர்மனி இந் நிகழ்வு நடைபெற்றது.

இதில், காந்தன், (ஆரம்ப கால செயல்பாட்டாளர்) எமது பார்வையில் நினை வழியா நாட்கள் துளசிச் செல்வன் (முன்னாள் போராளி), தருமலிங்கம் ரவீந்திரன் (அகரம் சஞ்சிகை ஆசிரியர்) ஆகியோர் உரை யாற்றினர்.

முதல் பிரதி குலம் வழங்க சுப்பிரமணியம் பரமானந்தன் (நாடு கடந்த தமிழீழ அரசு ) பெற்றார். சிறப்பு பிரதியை தங்கராஜா (தொழில் அதிபர்) பெற் றுக்கொண்டார். இந்த நிகழ்வில் முன்னாள் போரா ளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மண்ணெண்ணெய் மானியம் 2ஆம் கட்டம் ஆரம்பம்!

கொழும்பு, ஒக். 14


சீன அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் மானிய முறையில் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் விநியோ கத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பேருவளை துறைமுகப்பகுதியில் குறித்த நடவடிக்கை நேற்று முன் தினம் முதல் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தெரிவித்தார்.

அத்துடன், நாடளாவிய ரீதியில் உள்ள 28 ஆயிரம் மீனவர்களுக்கு மானிய முறை யில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, மீனவர் ஒருவருக்கு 153 லீற்றர் மண்ணெண்ணெய் மானியமாக வழங்கப் படுவதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த கூறினார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். அமோகமான நாள்.

**இடபம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் இருந்த பிரச்னைகள் விலகும். கனவு நனவாகும்.

**மிதுனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். பழைய கடனைப் பற்றி யோசிப்பீர்கள். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**கடகம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். புது நட்பு மலரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். தடைகள் உடைபடும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். ரகசியங்களை வெளியிட வேண் டாம். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**விருச்சிகம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். இனிமையான நாள்.

**தனுசு**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதாக திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியாபாரத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மீனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். தாய் வழியில் ஆதரவுப் பெருகும். சக ஊழியர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சோனியா, பிரியங்கா தமிழகத்தில்:**

# தொகுதி பங்கீடுகள் தொடர்பில் முதல்வர் ஸ்டாலினுடன் பேசுவர்!

**சென்னை, ஒக். 14**

**தி. மு. க. சார்பில் நடைபெறும் கலைஞர் நூற்றாண்டு மகளிர் மாநாட்டில் சோனியா காந்தியும், பிரியங்காவும் கலந்து கொள்கிறார்கள்.**

இதனிடையே, இருவரும் இன்று சனிக்கிழமை காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகிகளை சந்திக்கின்றனர். இதன்போது, தமிழ்நாட்டில் பாராளுமன்ற தேர்தலை எதிர்கொள்வது, அரசியல் நிலவரங்கள் பற்றி விவாதிப்பர் என்று கூறப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து முதல்வர் ஸ்டாலின் இல்லத்தில் சோனியாவும் பிரியங்காவும் பங்கேற்பர். இதில், இந்தியா கூட்டணியில் முக்கிய பங்கு வகிக்கும் கட்சி தி.மு.க. கூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டத்தில் அனைத்து தலைவர்களும் ஒன்றாக சந்திக்கின்றனர்.

இதனிடையே, தி. மு. க. கூட்டணியில் பிரதான கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சியுடன் தொகுதி பங்கீடு தொடர்பில் உத்தியோகபூர்வ பேச்சு எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. இன்றைய சந்திப்பின்போது அது தொடர்பில் பேசப்படும் என்று கூறப்படுகின்றது.

(ஐ)

# பன்னீர்செல்வம் அணியினர் கோவையில் தனி மாநாடு!

சென்னை, ஒக். 14

முன்னாள் முதல்வர் பன்னீர் செல்வம் தலைமையிலான அணி, ஜனவரி 6ஆம் திகதி கோவையில் மாநாடு நடத்த முடிவு செய்துள்ளது.

அ.தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம், தனியே செயல்பட்டு வருகிறார். அவர் நியமித்துள்ள தலைமை நிர்வாகிகள், மாவட்ட செயலர்கள் ஆலோசனை கூட்டம் சென்னையில் நடந்தது.

பாராளுமன்ற தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை தொடங்குவது, தேர்தல் கூட்டணி குறித்து இதன்போது ஆலோசிக்கப்பட்டது. திருச்சியில் மாநாடு நடத்தியது போல, கோவையில் எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி மாநாடு நடத்த இதன்போது முடிவு செய்யப்பட்டது.

கொங்கு மண்டலத்தில், தங்கள் செல்வாக்கை நிரூபிக்க, மாநாட்டை பிரமாண்டமாக நடத்த, பன்னீர்செல்வம் அணியினர் முடிவு செய்துள்ளனர்.

(ஐ)

# காவிரி நதி நீரை பெற்றுத்தர தமிழக அரசு விரும்பவில்லை

## நாம் தமிழர் சீமான்

சென்னை, ஒக். 14

காவிரி நதிநீர் விவகாரத்தில் தமிழகத்துக்கு தேவையான தண்ணீரை பெற்றுத்தர தமிழக அரசு நினைக்கவில்லை என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாராளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் விதத்தில் நாம் தமிழர் கட்சி சீரமைக்கப்படுகின்றது.

பின்னர் அவர், செய்தியாளர்களிடம் கூறும்போது, “காவிரி நதிநீர் விவகாரத்தில் தமிழகத்துக்கு தேவையான தண்ணீரை பெற்றுத்தர தமிழக அரசு நினைக்கவில்லை. தண்ணீரை கொடுக்கக்கூடாது என்பது கர்நாடகத்தின் அரசியல். அதனை பெற வேண்டும் என்பதுதான் தமிழ்நாட்டு அரசியல். பா. ஜ. க. அரசியல் என்பது இஸ்லாமியர்களுக்கு எதிரானது.

அமுலாக்கத்துறை, லஞ்ச ஒழிப்புத்துறை போன்றவை தற்போது அரசியல் தலைவர்களின் கை விரல்களாக மாறியுள்ளன. தேர்தல் நெருங்கும் சூழலில் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக சோதனைகள் நடைபெறுகின்றன. இவை, அரசியல் பழிவாங்கும் நட வடிக்கையாகும். நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்து போட்டியிட உள்ளது.

கடந்த மாதம் தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணத்தை முடித்து, தற்போது வட மாவட்டத்தில் சுற்றுப் பயணத்தை தொடங்கியுள்ளேன். அடுத்த மாதம் பாராளுமன்ற தேர்தல் பணிகள் தொடங்கி வேட்பாளர்கள் தேர்வு நடைபெறும்” என்றார்.

(ஐ)

# ஆர். எஸ். எஸ். அமைப்பினர் 20 இடங்களில் பேரணிகள்!

## அனுமதி கேட்டு விண்ணப்பம்

மதுரை, ஒக். 14

மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களில் 20 இடங்களில் ஆர். எஸ். எஸ். பேரணிக்கு அனுமதி வழங்கக் கோரி உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்கள் விரைவில் விசாரணைக்கு வருகிறது.

இந்த ஆண்டுக்கான விஜய தசமியை ஒட்டி ஆர்எஸ்எஸ் தரப்பில் , மதுரை உள்ளிட்ட 14 மாவட்டங்களில் 20 இடங்களில் ஆர். எஸ். எஸ். ஊர்வலம் நடத்துவதற்கு அனுமதி கோரி அந்தந்த மாவட்ட நிர்வாகிகள் தரப்பில், அனுமதி கேட்டு உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி தஞ்சாவூர், மதுரை, திருச்சி, திண்டுக்கல், தேனி, புதுக்கோட்டை, கரூர், நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர், சிவகங்கை, கன்னியாகுமரி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஆர். எஸ். எஸ். பேரணி, பொதுக் கூட்டம் நடத்த அனுமதி வழங்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பேரணியில் ஆர். எஸ். எஸ். தொண்டர் படையினர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வழித் தடத்தில் பேரணியாக செல்ல அனுமதி வழங்க உத்தரவிடக் கோரி மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுக்கள் விரைவில் பட்டியலிடப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது.

(ஐ)

# அரசாங்கத்தின் முகம் மாற்றமடைந்துள்ளது!

## கூறுகிறார் விக்னேஸ்வரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக். 14

**அரசாங்கத்தின் முகம் தற்போது மாற்றமடைந்துள்ளது என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

**பிரித்தானிய அமைச்சர் ஆன் மேரி ரெவல்யனுக்கும் தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றது.**

இச் சந்திப்பில் பிரித்தானிய அமைச்சருடன் அந்த நாட்டு இலங்கைக்கான தூதுவர் அன்ரு பற்றிக் கலந்து கொண்டார்.

தமிழ்க் கட்சிகளின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சிவஞானம் சிறிதரன், சி.வி. விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே சி.வி.விக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரித்தானிய அமைச்சர் ஆன் மேரி, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் என்ன என்பது



தொடர்பில் எங்களிடம் கேட்டிருந்தார்.

அப்போது நாம் அனைத்துப் பிரச்னைகள் குறித்தும் அவருக்குத் தெளிவுபடுத்தியிருந்தோம். அத்துடன் வடக்கு -கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களுக்கு இருக்கும் தேவைகள் என்ன என்பது குறித்தும் பேசினோம். போரின் பின்னர் எங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களால் ஏற்பட்டுள்ள தேவைகள் என்ன என்பது சம்பந்தமாக போதுமான அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டினோம்.

அதுமட்டுமல்லாது அரசாங்கத்தின் முகம் தற்போது சற்று வித்தியாசமாக அமைந்திருப்பதையும் சுட்டிக்காட்டினோம். எனினும் வருங்காலத்தில் இவை மாற்றமடையக் கூடும் என்று அவர் தெரிவித்திருந்தார். அத்துடன் இரண்டு இனங்களையும் என்ன விதமாகச் சேர்த்து வைக்கலாம் என்பதற்கான வழிமுறைகள் இருக்கிறதா என்பதைப் பற்றியும் எங்களுடன் ஆராய்ந்தார்-என்றார். (அ)

# 2,518 தாதியர்களுக்கு நியமனம்

கொழும்பு, ஒக். 14

2018ஆம் ஆண்டு தாதியர் பயிற்சியாளர்களாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 2,518 பேருக்கு நியமனத்தை வழங்குவதற்கு திறைசேரி இணக்கம் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் தொழிற்சங்கங்களுக்கான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக முதற்கட்டமாக 1,000 தாதியர் பயிற்சியாளர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு முன்னதாக யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

எனினும், சுகாதார அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப்பினர் முன்வைத்த கோரிக்கையை அடுத்து, சகல தாதியர் பயிற்சியாளர்களுக்கும் நியமனம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# 50 பஸ்கள் மீண்டும் சேவையில்!

கொழும்பு, ஒக். 14

சேவையிலிருந்து நீக்கப்பட்ட 50 சொகுசு ரக பஸ்கள் எதிர்வரும் 6 மாதங்களில், மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

பல்வேறு தொழில்நுட்பக் கோளாறுகள், உதிரிப்பாகங்களின் பற்றாக்குறை போன்ற பிரச்னைகள் காரணமாக தற்போது சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள குறித்த பஸ்கள், கட்டுப்பெத்த அதிசொகுசு ரக சுற்றுலா போக்குவரத்து சேவை நிறுவனத்தில் தரிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டின் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக அரசாங்கத்தினால், கொண்டுவரப்பட்ட 50 சொகுசு பஸ்களே இவ்வாறு தரித்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பஸ்களால் நாளாந்தம் ஒரு இலட்சம் ரூபாவுக்கு அதிகமான தேறிய இலாபத்தை ஈட்ட முடியும் என இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

குறித்த பஸ்களை விரைவாக திருத்தி மீண்டும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# துப்பாக்கி திருடிய சிப்பாய் சிக்கினார்!

கொழும்பு, ஒக். 14

கரந்தெனிய முகாமின் ஆயுதக் களஞ்சியத்தில் இருந்து ரி-56 ஆயுதத்தை திருடிய இராணுவ சார்ஜன்ட் ஒருவரை இராணுவ பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர் துப்பாக்கியுடன் கரந்தெனிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த ஆயுதம் கொலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா அல்லது வேறு குற்றங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு, சார்ஜன்டை தடுத்து வைப்பதற்கான உத்தரவை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயுதம் தொடர்பில் அரசாங்க பகுப்பாய்வாளரிடம் அறிக்கை கோரப்படும்.

விசாரணையில், கடந்த 4ஆம் திகதி இந்தத் துப்பாக்கியைத் திருடியதாக சார்ஜன்ட் தெரிவித்தார்.

அந்த ஆயுதத்தை தனது மோட்டார் சைக்கிளில் மறைத்து முகாமுக்கு வெளியே எடுத்துச் சென்றதாகவும், அன்றைய தினம் குடிபோதையில் இருந்ததால் தனக்கு எதுவும் நினைவில் இல்லை என்றும் கூறியுள்ளார்.

இந்த சார்ஜன்ட் படபொல பிரதேசத்தில் வசிக்கின்றார். அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை இராணுவ பொலிஸார் கண்டுபிடித்தனர். (அ)

# கோட்டாவினால் நாடு சீரழிந்தது!

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

கொழும்பு, ஒக். 14

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் தான் நாடு சீரழிந்ததாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதியின் காலத்தில் 850-900 பில்லியன் வருமானம் நாட்டுக்கு இல்லாமல் போனது.

இதனால்தான் டொலர் தட்டுப்பாடுக்கு நாம் முகம் கொடுத்தோம். நாட்டுக்குத் தேவையான நிதியை பெறுவதற்காக மத்திய வங்கி பணத்தை அச்சிட்டதை அடுத்துதான் பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டது.

தனக்கு நெருக்கமான பெரு வியாபாரிகளுக்கு சலுகை வழங்கும் வகையில்தான் முன்னாள் ஜனாதிபதி 900 பில்லியன் ரூபாய் வரி வருமானத்தை இல்லாமல் செய்தார்.

இதனால் ஏற்பட்ட பொருளாதார சிக்கலுக்கு தான் நாம் இப்போதுவரை முகம் கொடுத்து வருகிறோம்.

இதிலிருந்து மீள்வதற்காக இன்னமும் சிறிய காலம் மக்கள் துன்பங்களை அனுபவிக்க வேண்டியேற்படும்.

ஆனால், 2024 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி மக்களுக்குத் தேவையான உரிய நிவாரணங்களை வழங்குவார் என நாம் நம்புகிறோம்-என்றார். (அ)

# இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு அவசர சந்தர்ப்பத்தில் உதவ நிதி ஒதுக்கீடு!

கொழும்பு, ஒக். 14

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு அவசர சந்தர்ப்பத்தில் உதவும் வகையில் இலங்கை அரசாங்கமும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும் இணைந்து நிதி ஒதுக்கீடு செய்துள்ளன.

இதன்படி, இலங்கை அரசாங்கம் 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதியை ஒதுக்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் 10 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதியை, இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு அவசர சந்தர்ப்பங்களில் உதவுவதற்காக ஒதுக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களின் அவசர மருத்துவம், உணவு உள்ளிட்ட நலன் கருதி குறித்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை இஸ்ரேலில் உள்ள இரண்டு இலங்கையர்கள் காணாமல் போயுள்ள நிலையில், ஒருவர் காயமடைந்துள்ளார்.

இஸ்ரேலில் சுமார் 8 ஆயிரம் இலங்கையர்கள் பணிபுரிவதுடன், அவர்களில் 90 சதவீதமானோர் முதியோர் இல்லங்களில், பராமரிப்பாளர்களாக பணியாற்றுவதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

# சுற்றாடல் அமைச்சராக ரணில்!

கொழும்பு, ஒக். 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுற்றாடல்துறை அமைச்சராக பதவி ஏற்றுள்ளார்.

இதற்கமைய, முன்னாள் அமைச்சர் நஸீர் அஹமட் வகித்த சுற்றாடல்துறை அமைச்சுப் பதவி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், ஜனாதிபதியின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 44/3ஆம் பிரிவின் அடிப்படையில், பிரதமரின் ஆலோசனை அடிப்படையில், குறித்த சுற்றாடல் அமைச்சு, ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளதாக அந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் நஸீர் அஹமட்டின் கட்சி உறுப்புரிமை, முஸ்லிம் காங்கிரஸினால் இரத்துச் செய்யப்பட்டமை சட்டரீதியானது என உயர்நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது.

இதன்படி, அவரது பாராளுமன்ற உறுப்புரிமையும் இரத்தாகியுள்ளது. இந்தநிலையில், முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் ஆசனமொன்று வெற்றிடமாக உள்ளதாக பாராளுமன்றச் செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறியப்படுத்தியிருந்தார். (அ)

# சஜித், அநுர, சம்பந்தன் ஆகியோர் இஸ்ரேலிடம் பாடம் கற்கவேண்டும்

## கூறுகின்றது மொட்டுக் கட்சி

கொழும்பு, ஒக். 14

**இஸ்ரேல் நாட்டின் எதிர்க்கட்சியிடமிருந்து இலங்கையில் உள்ள எதிர்க்கட்சிகள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது. அத்துடன், தேசிய முக்கியத்துவமிக்க பிரச்னையின்போது அனைத்து கட்சிகளும் இணைந்து செயற்படக்கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும் எனவும் அக்கட்சி அழைப்பு விடுத்துள்ளது.**

பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போதே இஸ்ரேல்-ஹமாஸ் மோதலை இலங்கை அரசியலுடன் ஒப்பிட்டு கருத்துகளை முன்வைத்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இஸ்ரேலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு மத்தியில் - குறைந்தபட்ட பொது இணக்கப்பாட்டுடன் புதிய அமைச்சரவையுடன் அவசர அரசொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காசாவில் மட்டுமல்ல இந்த பூமியில் இருந்தே ஹமாஸ் அமைப்பு முழுமையாக அழிக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமரும், எதிர்க்கட்சி தலைவரும் கூட்டாக அறிவித்துள்ளனர். இஸ்ரேல் அரசு தனித்து விடப்படவில்லை, எதிரணியும் உடன் உள்ளது என்ற செய்தி இதன்மூலம் வழங்கப்பட்டுள்ளது. புதிய அரசின்கீழ் தான் தேசிய பிரச்னைக்கு இஸ்ரேல் முகம்கொடுக்கின்றது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தவேளை, இந்நாட்டில் உள்ள அனைத்து கட்சிகளுக்கும் கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார். ஜனாதிபதி பதவியைதவிர அமைச்சரவையில் பிரதமர் உள்ளிட்ட ஏனைய பதவிகளை ஏற்று - குறுகிய காலத்துக்கு பொது இணக்கப்பாட்டு அரசை அமைக்க முன்வருமாறும் கோரினார். வாய்மூலம் மட்டுமல்ல எழுத்துமூலமும் இந்த வேண்டுகோளை விடுத்திருந்தார்.

ஆனால் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன இதற்கு சாதகமான பதிலை வழங்கவில்லை.

தேசிய பிரச்னையொன்று ஏற்பட்டவேளை அரசியல் தியாகங்களுக்கு மத்தியில் அப்போது ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய விடுத்த அழைப்பை மேற்படி தரப்புகள் நிராகரித்தமை பாரதூரமான விடயமாகும். ஹமாஸ் உள்ளே புகுந்து தாக்குதல் நடத்தும்வரை மொசாட் அமைப்பு தூங்கிக் கொண்டு இருந்ததா, ஜனாதிபதி பதவியை துறக்கவும், எங்கள் ஆட்சியில் செய்கின்றோம் என இஸ்ரேல் நாட்டு எதிரணிகள் கூறினவா? ஆனால் எமது நாட்டு கட்சிகள் அவ்வாறு கோரின. எனவே, இது தொடர்பில் எமது நாட்டு மக்கள் சந்திக்க வேண்டும். தேசிய முக்கியத்துவமிக்க பிரச்சினையின் போது அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.-என்றார்.

(அ)

# தேர்தலைப் பிற்போடுவது தவறானதொரு முடிவாகும்!

## மகிந்த ராஜபக்ஷ போர்க்கொடி

கொழும்பு, ஒக். 14

ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படுமானால் அது தவறானதொரு முடிவாகவே இருக்கும். உரிய நேரத்துக்குள் அத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுவருவதாக வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மகிந்த மேற்கண்டவாறு கூறினார்.

"இது தொடர்பில் எனக்கு அறியக் கிடைக்கவில்லை. எது எப்படி இருந்தாலும் அவ்வாறு ஒத்திவைக்கப்பட்டால் அது தவறு. உரிய நேரத்துக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

மக்கள் எமது பக்கம் நின்று ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நம்புகின்றேன்." - எனவும் அவர் குறிப்பிட்டார்.

மொட்டு கட்சியின் தலைமைப்பதவி குறித்து எழுப்பட்ட கேள்விக்கு,

"எதிர்காலத்தில் நிச்சயம் மாற்றம் வரும், என்னாளும் என்னால் பதவியில் இருக்க முடியாது அல்லவா" - என பதிலளித்தார் மகிந்த.

(அ)

# ஹெரோயினுடன் சிப்பாய் கைது!

கொழும்பு, ஒக். 14

கண்டி வில்லியம் கோபல்லவ மாவத்தையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஹெரோயினுடன் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கன்னோருவ இராணுவ முகாமில் கடமையாற்றும் (வயது-39) வயதுடைய நபராவார்.

சந்தேக நபர் தொடர்பில் கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 470 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஜனாதிபதியின் சீன விஜயத்தின் பின் கடன் மறுசீரமைப்பு வெற்றியளிக்கும்

## ஆசு மாரசிங்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயத்தின் பின்னர், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டம் வெற்றியளிக்கும்-என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனா செல்கின்றார், சீனாவின் எக்ஸிம் வங்கி, கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் எனக் கூறியுள்ளது. சீனாவின் இந்த ஒத்துழைப்புடன் புதிய மாற்றமொன்று ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியின் சீன விஜயத்தின் பின்னர் அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து கடன் மறுசீரமைப்பை முடிவுக்கு கொண்டுவரலாம். இது பாரிய வெற்றியாகும். ஜனாதிபதியின் சிறந்த வெளிவிவகாரக் கொள்கையால்தான் இந்த பலன் எல்லாம் கிடைக்கின்றது- என்றார்.

# குறுந்தூர பார்வைக் குறைபாட்டால் பாதிக்கப்படும் பாடசாலை மாணவர்

கொழும்பு, ஒக். 14

பாடசாலை மாணவர்களில் 15 சதவீதமானவர்கள் குறுந்தூர பார்வை குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண் வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

மாணவர்கள் வீட்டில் தொலைக்காட்சியை அல்லது பாடசாலையில் கரும்பலகையை பார்க்கும் போது, தமது கண்களை சுருக்கி பார்வையிடுவார்களாயின் அவர்கள் தொடர்பில், பெற்றோர்களும், ஆசிரியர்களும் அவதானம் செலுத்த வேண்டும் என வைத்தியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனை பரிசோதனை மூலமே, கண்டறிய முடியும் எனவே, குறித்த மாணவர்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என வைத்தியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பரவி வரும் கண்நோய் தொடர்பில், சுகாதாரத்துறை தொடர்ந்தும் அவதானம் செலுத்தி வருகின்றது.

கொழும்பு மேற்கு, மத்திய, வடக்கு மற்றும் பொரளை ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் மாணவர்கள் மத்தியில் இந்த நோய் பரவி வருவதாக கொழும்பு சிரேஸ்ட சுகாதார வைத்திய அதிகாரி ருவான் விஜேமுனி தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்த கண்நோய் தொடர்பில் பொதுமக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

இந்த நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு கண்கள் சிவத்தல், தொடர்ந்தும் கண்ணீர் வெளியேறுதல், கண்களில் அரிப்பு ஏற்படுதல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களிடத்தில், 5 நாட்களுக்கு மேலாக இவ்வாறான அறிகுறிகள் நீடிக்குமாயின், உடனடியாக அவர்களை வைத்தியர் ஒருவரிடம் அழைத்துச் செல்லுமாறு பெற்றோர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கண்நோய் தொற்றை குறைப்பதற்காக அடிக்கடி கைகளைச் சுத்தம் செய்தல், கண்களைத் தொடுவதை தவிர்ப்பது உள்ளிட்ட சுகாதார ஆலோசனைகளை உரிய வகையில் பின்பற்றுமாறும் கொழும்பு சிரேஷ்ட சுகாதார வைத்திய அதிகாரி, ருவான் விஜேமுனி வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, கொழும்பு - கொட்டாஞ்சேனையில் உள்ள பாடசாலை ஒன்றில் அதிகளவிலான சிறுவர்களிடையே கண்நோய் தொற்று ஏற்பட்டதை அடுத்து, அந்த பாடசாலையின் 6ஆம், 7ஆம், 8ஆம் தரங்களுக்கான கற்றல் செயற்பாடுகள் இன்று வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

(அ)

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தயாராம்!

## மீண்டும் கூறுகிறார் மைத்திரி



கொழும்பு, ஒக். 14

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுமாறு கோரிக்கைகள் விடுக்கப்படுமானால் அதனை ஏற்பதற்கு தயாராகவே இருக்கின்றேன் என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

2015 இல் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றேன், எனினும், எனக்கு தேவையானவற்றை செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்தாலும் பாராளுமன்றத்தின் அதிகாரம் இல்லாவிட்டால் உரிய வகையில் செயற்பட முடியாது. எனது கொள்கை ரீதியிலான அரசியலை முன்னெடுக்கவே நாடாளுமன்ற தேர்தலில்கூட போட்டியிட்டேன், முதுகெலும்பு இருக்கும்வரை அரசியலில் ஈடுபடுவேன்-என்றார். (அ)

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இதுவரை சபையில் முன்வைக்கப்படவில்லை!

கொழும்பு, ஒக். 14

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இதுவரையில் நாடாளுமன்றில் முன்வைக்கப்படவில்லை என சட்டமா அதிபர் உயர்நீதிமன்றுக்கு அறியப்படுத்தியுள்ளார்.

குறித்த உத்தேச பயங்கரவாத சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி, தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத் மற்றும் ஹரினி அமரசூரிய உள்ளிட்ட தரப்பினரால் உயர்நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்தநிலையில் குறித்த மனுக்கள் நேற்று உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், குறித்த சட்டமூலம், இதுவரையில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை என கூறினார் என தெரிவிக்கப்பட்டது.

(அ)

# கச்சதீவு ஒப்பந்தத்தை இலங்கை மிக இறுக்கமாகவே பின்பற்றும்!

## சிறீரங்கேஸ்வரன் கருத்து

யாழ்ப்பாணம், ஒக். 14

**இந்திய மற்றும் இலங்கை அரசாங்கத்தால் இணக்கம் காணப்பட்ட கச்சதீவு ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் இறுக்கமாகவே பின்பற்றும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், கட்சியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.**

**இதுவே எமது கட்சியின் எதிர்பார்ப்பாகவும் உள்ளதாகவும் அவர் கூறினார்.**

**யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

கடந்த 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானதாக்கப்பட்டது.

இதேவேளை இந்தியாவில் அடுத்த ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது.

தமிழகம், பாண்டிச்சேரி மாநிலங்களில் 40 தொகுதிகள் உள்ளன.

இந்த தொகுதிகளின் பாராளுமன்ற ஆசனங்களை இலக்கு வைத்தே இவ்விவகாரம் ஊதிப் பெருப்பிக்கப்படுகின்றது.

இது காலத்துக்கு காலம் தேர்தல்கள் அண்மிக்கின்ற சமயங்களில் இந்தியாவில் பேசுபொருளாக வலம் வருவது வழமையான ஒரு விடயம்.

அந்த வகையிலேயே இப்போதும் இவ்வாறான கருத்துக்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் பிரதமர் தினேஸ் குணவர்தன இந்திய ஊடகத்துக்கு தெரிவித்த கருத்தின் அடிப்படையில் பல்வேறு கருத்துக்கள் ஊடகங்களில் பரவினாலும் கடற்றொழில் அமைச்சரின் முடிவே இறுதியானதாக இருக்கும்-என்றார். (அ)

# முக்கிய 2 மருந்துகளுக்கு நாட்டில் கடும் தட்டுப்பாடு



கொழும்பு, ஒக். 14

நீரிழிவு மற்றும் புற்று நோய்களுக்கு வழங்கப்படும் இரண்டு முக்கிய மருந்துகளுக்கு பற்றாக்குறை நிலவுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீரிழிவு மற்றும் புற்றுநோயை எதிர்நோக்கியுள்ள நோயாளர்களுக்கான மருந்துகளில் தட்டுப்பாடு நிலவுகிறது.

இது எமது நாட்டின் சுகாதார துறையை மேலும் வீழ்ச்சி பாதைக்கு இட்டுச் செல்கிறது. குறித்த இரண்டு அத்தியாவசிய மருந்துகளை தற்போதைய அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க தவறியுள்ளது.

இவ்வாறு அத்தியாவசிய மருந்துகளை வழங்க தவறியுள்ள அரசாங்கம், தரம் குறைந்த மருந்துகளை கொள்வனவு செய்து மருந்து மாஃபியா ஊடாக மக்களை தவறாக வழிநடத்துகிறது -என்றார்.

இதேவேளை, நாட்டில் மருந்து விநியோகம் தொடர்பில், பாரிய நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல முன்பதிவுகளையும் இடைநிறுத்துமாறு சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், குறித்த முன்பதிவுகளை இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# கண் வில்லைகளுக்கு தட்டுப்பாடு இல்லை!

## ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள கண் வில்லைகள் நன்கொடை

கொழும்பு, ஒக். 14

கண் சத்திரசிகிச்சைக்கான வில்லைகளுக்கு தட்டுப்பாடு இல்லை என தேசிய கண் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சிந்தக படவல தெரிவித்தார்.

ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள 5000 கண் வில்லைகள் பிரித்தானியாவிலிருந்து நன்கொடையாக வழங்கப்பட்டதாகவும் கண் வில்லை தட்டுப்பாட்டால் ஒரு போதும் கண் வில்லை சத்திரசிகிச்சைகளை நிறுத்தப்படவில்லை எனவும் அவர் வலியுறுத்தினார்.

உலக பார்வை தினத்தை முன்னிட்டு தேசிய கண் வைத்தியசாலையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

"பணியிடத்தில் ஏற்படும் கண் விபத்துகளை குறைப்பது" என்பது இந்த ஆண்டு தேசிய பார்வை தினத்தின் தொனிப்பொருளாகும்.

சராசரியாக மாதமொன்றுக்கு சுமார் 900 கண் வில்லை சத்திரசிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

பிரித்தானியாவிடம் இருந்து நன்கொடையாக பெறப்பட்ட கண் வில்லைகள் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சினால் நன்கொடையாக பெறப்படும் இந்த கண் வில்லைகள் சத்திரசிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படும்-என்றார். (அ)

# இந்திய பெருங்கடல் நீர்நிலை மட்டுமல்ல பொருளாதார மூலோபாய வழித்தடமாகும்

## கொழும்பில் கூறினார் ஜெய்சங்கர்

கொழும்பு, ஒக். 14

இந்தியப் பெருங்கடலை சுதந்திரமான, திறந்த இடமாக மாற்றுவதில் ஐ.நா.வின் கடல் சட்டத்தின் மாநாட்டின் அடிப்படையில், உறுப்பு நாடுகள் செயற்பட வேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

'ஐயோரா' என கூறப்படும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைந்துள்ள 23 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துகொண்ட மாநாடு கடந்த 11ஆம் 12ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இந்தியப் பெருங்கடல் நாடுகளின் நல்வாழ்வு மற்றும் முன்னேற்றத்திற்காக இந்தியாவின் அர்ப்பணிப்பு காத்திரமாக உள்ளது.

இந்தியா அதன் அண்டை நாட்டுக்கு முன்னுரிமை என்ற அணுகுமுறையின் கீழ் செயல்படுகிறது.

சர்வதேச ஒழுங்கு, சட்டத்தின் ஆட்சி, நிலையான மற்றும் வெளிப்படையான உள்கட்டமைப்பு முதலீடு, இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் கொள்கைகள் இந்தோ-பசிபிக் பற்றிய பரந்த பார்வையையும் கொண்டுள்ளது.

இந்தோ-பசிபிக் மீதான பாதுகாப்பு குறித்து இந்தியாவின் முன்முயற்சியால் கொண்டுவரப்பட்ட திட்டங்கள், 'ஐயோரா' வின் 22ஆவது அமைச்சரவைக் சபை கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்வரும் காலத்தில் அவற்றுக்கு நடைமுறை வடிவம் கொடுக்க மீண்டும் முயற்சிப்போம்.

இந்தியப் பெருங்கடல் ஒரு குறிப்பிடத்தக்க நீர்நிலை மட்டுமல்ல, ஒரு முக்கியமான பொருளாதார மற்றும் மூலோபாய வழித்தடமாகவும் உள்ளது. அதைச் சுற்றியுள்ள மற்றும் அதற்கு அப்பால் உள்ள நாடுகளின் வளர்ச்சி மற்றும் செழிப்பு ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கிறது-என்றார். (அ)

# இலங்கைக்கு வழங்கிய கடனில் ஒரு பகுதியை தள்ளுபடி செய்வது குறித்து பரிசீலிக்கவேண்டும்

## பிலிப்பைன்ஸ் நிதி அமைச்சர் சீனாவிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 14

இலங்கையின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் விரக்தியடையாமல் சவால்களை வெற்றி கொள்வதற்கு நம்பிக்கையுடன் இருக்கவேண்டும் என பிலிப்பைன்ஸின் நிதியமைச்சர் பெஞ்சமின் ஈ.டியோகோனோ தெரிவித்துள்ளார்.

கோவிட் தொற்றுநோய்க்குப் பிறகு பிலிப்பைன்ஸ் எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களை நினைவுகூர்ந்த ஈ.டியோகோனோ, வலுவான கட்டமைப்பு சீர்திருத்தங்களே எமது நாட்டை சவால்களை சமாளிக்க உதவியதாக கூறியுள்ளார்.

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கடனில் ஒரு பகுதியை தள்ளுபடி செய்வது குறித்து சீனா பரிசீலிக்க வேண்டும். இல்லை என்றால் இலங்கையின் பொருளாதாரம் பின்னோக்கி நகரும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த கூட்டங்கள் மொராக்கோவில் நடைபெற்றுவருகிறது.

இதில் கலந்துகொண்டுள்ள ஈ.டியோகோனோ, தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் பிராந்திய பங்காளிகளின் ஆதரவைப் பெறுவது இலங்கைக்கு எளிதாக இருக்கும். இலங்கை தனது உள்நாட்டு வளங்களை பயன்படுத்துவதை மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

பிளாஸ்ரிக் பொருட்கள் வைத்திருந்த

# 14 கடை உரிமையாளர்களுக்கு எதிராக யாழில் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 14

தடை செய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை உடைமையில் வைத்திருந்த 14 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் சுபோகரன் தெரிவித்தார்.

அதன்படி, யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒன்பது மாத கால பகுதிகளில் 13 தடவைகள் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த சோதனை நடவடிக்கைகளின்போது உணவகங்கள், விற்பனை நிலையங்கள் என 205 வர்த்தக நிலையங்கள் சோதனையிடப்பட்டுள்ளன.

அவற்றில் 14 உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த வழக்குகள் தற்போது நிலுவையில் உள்ளன.

எதிர்வரும் காலங்களிலும் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படவுள்ளன.

எனவே வர்த்தகர்கள் தடை செய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் என்பவற்றை விற்பனை செய்யவோ, பயன்படுத்தவோ உடைமையில் வைத்திருக்கவோ வேண்டாம் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# சம்மாந்துறையில் ஆயுதங்கள் மீட்பு!

**ஆலய காணியின் கிணற்றில் இருந்து**





அம்பாறை, ஒக். 14

**சம்மாந்துறையில் உள்ள சிறீ பத்ரகாளி அம்மன் ஆலயத்துக்குரிய காணி ஒன்றின் கிணற்றில் இருந்து ஆயுத தொகுதி ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.**

நேற்று முன் தினம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறீ பத்ரகாளி அம்மன் கோவிலுக்கு சொந்தமான காணி ஒன்றில் உள்ள கிணற்றினை சுத்திகரித்த போது ரி-56 ரக துப்பாக்கி ரவைக் கூடு இரண்டு, 261 தோட்டாக்கள், எல்.எம்.ஜி. துப்பாக்கி தோட்டாக்கள் 57, 0.22 துப்பாக்கிக்குரிய வெற்று தோட்டாக்கள் 46 அதற்குரிய தோட்டாக்கள் 3,எம் 16 துப்பாக்கிகுரிய தோட்டாக்கள் 11,சுடர் துப்பாக்கி ஒன்று என்பன கிணற்றினுள் இருந்து மீட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கோவில் பராமரிப்பாளர் சம்மாந்துறை பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய குறித்த பொருட்களை சம்மாந்துறை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த ஆயுதங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கல்முனை பற்றிமாவில் ஆசிரியர் தின நிகழ்வு




காரைதீவு, ஒக். 14

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் சர்வதேச ஆசிரியர் தின விழா நேற்று வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

முன்னதாக அதிதிகள் வரவேற்கப்பட்டனர். கூடவே ஆசிரியர்களும் அவர்களது புதிய வர்ண சீருடையுடன் மாலை சூட்டி வரவேற்கப்பட்டார்கள்.

கல்முனை வலய கணக்காளர் ஹபிபுல்லா சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார்.

ஆசிரியர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள் கூடவே இம்முறை கராத்தே போட்டியில் தேசிய ரீதியில் வெண்கலப்பதக்கம் பெற்ற பற்றியா மாணவன் கேதீஸ்வரன் ரோஹித் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

பயிற்றுவிப்பாளர்களும் பாராட்டப்பட்டார்கள்.

ஆசிரியர்களின் கலைநிகழ்ச்சிகள் மேடையேறின. (அ)

# சம்மாந்துறை வைத்தியசாலையில் எச்.ஐ.வி. துரித பரிசோதனை சேவை



அம்பாறை, ஒக். 14

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனைக்கமைய பிராந்திய பாலியல் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் என் .எம் தில்ஷானினால் எச்.ஐ.வி. துரித பரிசோதனையை மேற்கொள்வதற்கான விசேட பயிற்சி ஒன்று, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் தெரிவு செய்யப்பட்ட தாதிய உத்தியோகஸ்த்தர்கள் சிலருக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் எம்.எச்.எம். ஆஸாத் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சம்மாந்துறை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்கள்,எச்.ஐ.வி. துரித பரிசோதனை சேவையை, இனி சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் இலவசமாக பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(அ)

# புதிய ஆண்டுக்கான பயிலுநர் ஆசிரியர்களை கல்வியற் கல்லூரிகளுக்கு இணைக்கும் நிகழ்வு

மட்டக்களப்பு, ஒக். 14

தேசிய கல்வியற் கல்லூரிகளில் புதிய கல்வி ஆண்டுக்கான ஆசிரிய பயிலுநர்களை இணைக்கும் வகையில் கல்விக் கல்லூரிகளில் பயிலுநர்களுக்கான பதிவு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று கல்வியற் கல்லூரிகளின் நடைபெற்ற நேர்முகத் தேர்வுகளில் தெரிவு செய்யப்பட்ட சுமார் ஏழாயிரம் ஆசிரிய பயிலுநர்கள் இலங்கையில் உள்ள 19 தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இணைத்துக் கொள்வதற்கென பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக, அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய பயிலுநர்களை பதிவு செய்யும் நிகழ்வு கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே. புண்ணிமூர்த்தி தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

ஆரம்ப நெறி, இஸ்லாம், விஞ்ஞானம், கணிதம், வர்த்தகமும் கணக்கீடும் மற்றும் விஷேட கல்வி ஆகிய பாட நெறிகளுக்காக 384 ஆசிரிய பயிலுநர்கள் இதன்போது பதிவு செய்யப்படவுள்ளர்.




இந்நிகழ்வில் கல்லூரியின் நிதி நிருவாகத்திற்கான உப பீடாதிபதி எம்.சீ.ஜூனையிட், பதிவாளர் எம். ஜிப்ரி, விரவுரை இணைப்பாளர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள் கல்வி சாரா உத்தியோகத்தர்கள் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# காசா மீது பதிலடியை நிறுத்தப்போவதில்லை!

## அறிவித்தது இஸ்ரேல்

ஜெருசலேம், ஒக். 14

**பணயக் கைதிகளாக அழைத்து செல்லப்பட்டுள்ள தங்களது நாட்டு பிரஜைகள் விடுவிக்கப்படும் வரை காசா மீதான பதில் தாக்குதலை நிறுத்தப் போவதில்லை என இஸ்ரேல் அறிவித்துள்ளது.**

**காசாவுக்கான எரிபொருள், நீர் மற்றும் உணவு விநியோகத்தை இஸ்ரேல் நிறுத்தியுள்ள நிலையில் காசாவில் மின்சாரம் துண்டிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

ஹமாஸ் தரப்பினர் நடத்திய தாக்குதல்களில் இஸ்ரேலில் இதுவரையில் 1,200 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசா பகுதியிலுள்ள ஹமாஸ் ஆயுததாரிகளை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் இதுவரையில் 1,300 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இந்தநிலையில், ஹமாஸ் தரப்பினர் 150 இஸ்ரேலியர்களை பணயக் கைதிகளாக அழைத்துச் சென்றுள்ளதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இஸ்ரேலில் உள்ள சுமார் 25 அமெரிக்க பிரஜைகள் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டணி பிளிங்



கன் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இஸ்ரேலுக்கு சென்றுள்ள அவர், அங்கு ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், அமெரிக்கா தொடர்ந்தும் இஸ்ரேலுக்கு ஆதரவளிக்கும் எனவும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார். (அ)



# பணயக்கைதியாக பிடித்த பெண்ணையும் இரு குழந்தைகளையும் விடுவித்த ஹமாஸ்!

ஜெருசலேம், ஒக். 14

இஸ்ரேலுக்குள் நுழைந்து திகைப்பூடும் தாக்குதல் நடத்திய ஹமாஸ் போராளிகள், இஸ்ரேலுக்குள்ளிருந்து சுமார் 130 பேரை பணயக்கைதியாக பிடித்து வந்திருந்தனர். அவர்களில் தாயொருவரையும், அவரது இரண்டு பிள்ளைகளையும் போராளிகள் விடுவித்துள்ளனர்.

பெண் பணயக்கைதிகள் மற்றும் இரண்டு குழந்தைகளை விடுவிப்பதைக் காட்டும் காணொளியை ஹமாஸின் கஸ்ஸாம் படையணி வெளியிட்டுள்ளது.

ஹமாஸ் போராளிகளாக இருக்கலாம் என்று கருதப்படும் ஆண்கள், இஸ்ரேலுக்கும் காசாவிற்கும் இடையிலான எல்லையாக இருக்கும் வேலிக்கு அருகில் உள்ள ஒரு திறந்த பகுதியில் அவர்களை விட்டுவிட்டு விலகிச் செல்லும் வீடியோ வெளியிடப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை ஹமாஸ் நிராகரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டது. ஹமாஸின் ஆயுதப் பிரிவான காசிம் பிரிகேட்ஸ் ஒரு அறிக்கையில், அந்தப் பெண் ஒரு இஸ்ரேலிய நாட்டவர் என்று கூறியது. (அ)

# பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்!

மணிலா, ஒக். 14

பிலிப்பைன்ஸின் தலைநகரான மணிலாவின் தெற்கு பகுதியில், நேற்று 5.2 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கமொன்று ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ஓரியன்டல் மீண்டோரோ மாகாணத்தில் உள்ள பியூர்டோ கலேரியா நகரில் இருந்து 31 கி.மீ. தொலைவில் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலநடுக்கத்தைத் தொடர்ந்து மக்கள் கட்டிடங்களை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் சேதங்கள் குறித்த தகவல், இதுவரை வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹமாஸ் ஆயுததாரிகளின் செயற்பாடு மிகத்தவறானது

## சாடுகின்றார் ஜோ பைடன்

நியூயோர்க், ஒக். 14

ஹமாஸ் ஆயுததாரிகளின் செயற்பாடு தவறானது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

காசா பகுதியிலிருந்து அதிகளவான ஆயுததாரிகள் ஊடுருவியுள்ளதாக வெளியான தகவலை அடுத்து இஸ்ரேலின் தெற்கு நகரமான அஷ்கெலோனில் வசிப்பவர்களை பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மீதான ஹமாஸ் தரப்பினரின் தாக்குதல் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டதுடன் இஸ்ரேல் தரப்பிலிருந்து பதில் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

நேற்று அதிகாலை வரை அங்கு போர் தொடர்வதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவித்தன.



இந்தநிலையில் லெபனானுடனான தங்களது எல்லையில் மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் சிரியா பகுதியிலிருந்து குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை கடந்துள்ளதுடன் காசாவில் 900 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன. (அ)

# ஹமாஸின் உறுப்பினர்கள் சகலரும் கொல்லப்படுவர்!

## இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

ஜெருசலேம், ஒக். 14

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு ஹமாஸின் அனைத்து உறுப்பினர்களையும் கொன்று காஸாவில் இருந்து ஹமாஸை ஒழிப்பதாக உறுதியளித்துள்ளார்.

'காஸா பகுதியில் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு இடையே வேறுபாடு எதுவும் இல்லை.

உலகம் ஐ.எஸ். அமைப்பை அழித்தது போல் நாமும் அழிப்போம். அனைத்து ஹமாஸ் உறுப்பினர்களும் இறக்க வேண்டும்' என இஸ்ரேல் தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் கூறினார்.

எதிர்க்கட்சிகளுடன்இணைந்து புதிய ஐக்கிய அரசாங்கத்தை அமைத்த பின்னர் பிரதமர் நெதன்யாகு இவ்வாறு தெரிவித்தார்.

ஹமாஸ் போராளிகளுக்கு எதிராக தொடங்கிய போருக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால், ஹமாஸ் அமைப்பை முற்றிலுமாக அழிக்கவேண்டும் என்று ஐக்கிய அரசு நம்புகிறது.

எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான பென்னி காண்ட்ஸ் மற்றும் எதிர்க்கட்சி அரசியல் குழுக்களின் பங்கேற்புடன் பிரதமர் நெதன்யாகு இந்த புதிய ஐக்கிய அரசாங்கத்தை அமைத்துள்ளார்.

பலஸ்தீனத்துக்கு எதிரான போர் குற்றங்களை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசி, சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் ஆகியோர் நேற்று ஆலோசனை நடத்தினர்.

ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக, காஸா மீது இஸ்ரேல் இராணுவம் கடந்த 5 நாட்களாக தாக்குதல் நடத்தி வருகிறது.

இஸ்ரேல் விமானப்படை நடத்திய குண்டு வீச்சில் காஸா நகரில் பல அடுக்குமாடி கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன.

வான் தாக்குதலுக்கு பயந்து காஸா நகரில் உள்ள மக்கள் தங்கள் உடமைகளுடன், ஐ.நா. பள்ளிகள் உட்பட பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்கின்றனர்.

பேக்கரிகள் மற்றும் பலசரக்கு கடைகளில் மக்கள் கூட்டம் அலைபோதுகிறது. பேக்கரிகளில் எரிபொருள் மற்றும் மின்சாரம் இல்லாததால், அவைகள் திறந்த சில மணி நேரங்களிலேயே மூடப்படுகின்றன.

காஸா பகுதியில் அனைத்து நுழைவாயில்களும் மூடப்பட்டுவிட்டன. இதனால் காஸா நகரில் உள்ள மக்களால் அப்பகுதியைவிட்டு வெளியேற முடியவில்லை. எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படாமல் குண்டுகள் வீசப்படுகின்றன.

இதனால் அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்கள் இடிபாடுகளில் சிக்கி இறக்கின்றனர். வான் தாக்குதலில் காஸாவில் சுமார் 1,200 பேர் உயிரிழந்ததாக பலஸ்தீன சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசி மற்றும் சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் ஆகியோர் நேற்று இஸ்ரேல்-பலஸ்தீன விவகாரம் குறித்து ஆலோசனை நடத்தினர். ஈரான், சவுதி இடையே கடந்த 7 ஆண்டுகளாக விரோதம் நிலவிவந்தது.

இதை போக்கி மீண்டும் உறவுகள் ஏற்பட சீனா முயற்சி மேற்கொண்டது. இதையடுத்து மீண்டும் நல்லுறவை ஏற்படுத்த சவுதி அரேபியா, ஈரான் ஆகியவை கடந்த மார்ச் மாதம் ஒப்புக்கொண்டன.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரு நாட்டு தலைவர்களும் முதல் முறையாக தொலைபேசியில் பேசினர். அப்போது பலஸ்தீனத்துக்கு எதிரான போர் குற்றங்களை முடிவுக்கு கொண்டுவரவேண்டிய அவசியம் குறித்து இருவரும் ஆலோசித்தனர்.

இஸ்ரேலின் தாக்குதலை தடுத்து நிறுத்துவது தொடர்பாக சர்வதேச நாடுகளுடன் பேசுவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுப்பதாக சவுதி இளவரசர் தெரிவித்தார்.

அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலை சவுதி அரேபியா நிராகரிக்கிறது என அவர் வலியுறுத்தினார். (அ)

# இஸ்ரேல்-ஹமாஸ் போரினால் உலக அமைதியே கேள்விக்குறி

## சிறிகாந்தா சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஒக். 14**

**மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும், ஹமாஸ் இயக்கத்திற்கும் இடையில் இப்போது தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் போரினால் உலக அமைதியின் எதிர்காலமே கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என தமிழ் தேசியக் கட்சியின் தலைவரும் மூத்த சட்டத்தரணியுமான என்.சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.**

**இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.**

**அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-**

மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும், ஹமாஸ் இயக்கத்திற்கும் இடையில் இப்போது தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் போரில், காசா பிரதேசத்தில் வாழும் பலஸ்தீன மக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டும், காயப்படுத்தப்பட்டும் வருகையில், அப்பிரதேசம் தண்ணீர் மற்றும் மின்சாரமின்றி திணறிக் கொண்டிருக்கின்றது.

மிக மோசமான மனிதாபிமான நெருக்கடி ஒன்று, காசாவில் ஏற்பட்டிருக்கும் நிலையில், இஸ்ரேல் நாட்டிலும் பொதுமக்களின் உயிரிழப்புக்களும் பாதிப்புக்களும் உயர்ந்து வருகின்றன.

இப்பொழுது நடைபெறுவது இஸ்ரேலின் அரச பயங்கரவாதத்திற்கும், பலஸ்தீன மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய ஹமாஸ் இயக்கத்தின் பயங்கரவாதத்திற்கும் இடையிலான போர் என்பதே உண்மையானது.

இஸ்ரேலுக்குள் ஊடுருவித் தாக்கிய ஹமாஸின் போர் நடவடிக்கையை சாட்டாக வைத்து, அதன் கட்டுப்பாட்டில் உள்ள காசா பிரதேசத்தையே தரைமட்டமாக்கி, இரு துண்டுகளாக அமைந்திருக்கும் பலஸ்தீன மண்ணின் ஒரு துண்டினை ஒட்டு மொத்தமாக விழுங்கிவிடும் இலக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இஸ்ரேலுக்கு, அமெரிக்காவும் மற்றும் மேற்குலக நாடுகள் பலவும் உதவிக் கொண்டிருக்கும் நிலைமையில், உலக அமைதியின் எதிர்காலமே கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

1948 இல் இஸ்ரேலின் தோற்றத்துடன், தமது சொந்த பலஸ்தீன மண்ணிலிருந்து வேட்டையாடி விரட்டப்பட்ட பலஸ்தீன மக்களின் நீதிக்கான நீண்ட போராட்டத்தில், 1993 இல் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் மத்தியஸ்தத்துடன், இஸ்ரேலிய பிரதமர் யிற்சாக் றபினுக்கும், பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசிர் அரபாத்துக்கும் இடையில் கையெழுத்தான சமாதான ஒப்பந்தம், பலஸ்தீன மண்ணில், யூதர்களுக்கு இஸ்ரேலும், பலஸ்தீனிய அரபுக்களுக்கு பலஸ்தீனமும் என, இரண்டு நாடுகள் அருகருகாக அமைவதற்கு வழிகாட்டி, ஓர் வரலாற்று ஆச்சரியத்தையே நிகழ்த்தியிருந்தது.

ஆனால், படுகொலை செய்யப்பட்ட பிரதமர் இற்சாக் றபினுக்குப் பிறகு, ஆட்சி அதிகாரத்திற்கு வந்த இஸ்ரேலிய தலைவர்களின் நடவடிக்கைகளால், அந்த சமாதான ஒப்பந்தம் செயல் இழந்துபோனதால் ஏற்பட்ட மோதல் சூழ்நிலையின் உச்சக்கட்டமே, இப்போது நடைபெறும் போராகும்.

இந்தப் போரில் தலையிட்டு, போர் நிறுத்தம் ஒன்றினை சாதிக்கும் வல்லமை கொண்டுள்ள நாடுகள் எல்லாம், இஸ்ரேலின் பக்கமே இப்போது சாய்ந்து நிற்கின்றன-என்றுள்ளது. (அ)

# இலங்கை வருவதற்கு வீஸா கட்டணமில்லை

கொழும்பு, ஒக். 14

5 நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளிடம் விஸா கட்டணத்தை அறவிடவேண்டாம் என்ற யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அந்தவகையில், சீனா, ரஷ்யா, இந்தியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கே இவ்வாறு விஸா கட்டணம் விலக்களிக்கப்படவுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்தும் வகையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த வருடத்தின் கடந்த மாதத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 938 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டுக்கு வருகைத் தந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 10 இலட்சத்தை கடந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

(அ)

# வாகன இறக்குமதிக்கு அரசு பச்சைக் கொடி!

கொழும்பு, ஒக். 14

அனைத்து விதமான வாகனங்களையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கான கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளதாக, வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்துடன் குறித்த கொள்கைகள் அமைச்சரவையில் முன் வைக்கப்பட்ட பின்னர் வாகன இறக்குமதி தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். (அ)

# இம்மாதம் இரு கிரகணங்கள்!

கொழும்பு, ஒக். 14

இந்த மாதம் இரண்டு கிரணங்கள் நிகழவுள்ளன. அதில் சூரிய கிரகணம் இலங்கைக்கு தென்படாத நிலையில், சந்திர கிரகணம் மட்டும் தென்படும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் வானியலாளரும், விண்வெளி விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளருமான பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நெருப்பு வளைய சூரிய கிரகணமும், 28 ஆம் திகதி இரவில் பகுதி சந்திர கிரகணமும் நிகழவுள்ளன.

இந்த நெருப்பு வளைய கிரகணம் அமெரிக்காவில் நன்றாக தெரியும். மெக்சிக்கோ, மத்திய அமெரிக்கா, கொலம்பியா மற்றும் பிரேசில் பகுதிகளிலும் தென்படும்.

சூரிய கிரகணம் இலங்கையில் தென்படாது.

இலங்கை நேரப்படி இந்த சூரிய கிரகணம் அமெரிக்காவில் இன்று இரவு 8.34 மணிக்கு ஆரம்பமாகி பிரேசில் அருகே நாளை அதிகாலை 2.25 மணிக்கு முடிவடைகிறது.

அதன்படி, 14 நாட்களுக்குப் பிறகு, 28 ஆம் திகதி இரவு 11.32 மணி முதல் பகுதி சந்திர கிரகணம் நிகழும்.

இந்த சந்திர கிரகணம் ஐரோப்பா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்காவின் பெரும்பாலான பகுதி, பசிபிக், அத்திலாந்திக், இந்தியப் பெருங்கடல், ஆர்க்டிக் மற்றும் அந்தாட்டிக்கா ஆகிய நாடுகளில் தென்படும்.

இந்த கிரகணத்தின் பகுதி நிலை இலங்கைக்கு இம்மாதம் 29 ஆம் திகதி அதிகாலை 1.05 மணி முதல் 2.23 மணி வரை தென்படும். முழு கிரகணம் அதிகாலை 1.44 மணிக்கு இருக்கும் -என்றார். (அ)

# சவூதியில் வீட்டு வேலைக்காக சென்ற பெண் மீது தீ வைப்பு!

கொழும்பு, ஒக். 14

சவூதி அரேபியாவில் வீட்டுப் பணிக்காகச் சென்ற இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவரின் உடலுக்கு அவர் பணிபுரிந்த வீட்டின் உரிமையாளரே தீயிட்டுள்ளார்.

கொத்தடுவ புதிய நகரில் வசித்து வந்த 45 வயதுடைய நயனா தில்ருக்ஷி என்ற பெண்ணே இந்த அசம்பாவித சம்பவத்திற்கு முகம் கொடுத்துள்ளார்.

சுமார் 7 மாதங்களுக்கு முன்பு இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவத்தை எதிர்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியாவில் உள்ள மருத்துவமனையில் பல மாதங்களாக சிகிச்சை பெற்று வந்ததாகவும், பின்னர் சவுதி பொலிஸாரின் தலையீட்டில் தான் தடுப்பு மையத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தற்போது கடும் சிரமங்களுக்கு மத்தியில் சுமார் ஒன்றரை மாதங்களாக தடுப்பு முகாமில் வசித்து வருவதால், தம்மை விரைவில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நயனா தில்ருக்ஷி என்ற பெண் இவ்வாறு வேலை செய்து கொண்டிருந்தபோது, கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி வீட்டு உரிமையாளர், அவரது மனைவி , பிள்ளைகளுக்குச் சரியாகச் சாப்பாடு கொடுக்கவில்லை எனக் கூறி தாக்கியதாக அவர் தெரிவித்தார்.

இதையடுத்து அந்த பெண் நயனா தில்ருக்ஷியின் உடலில் பெற்றோலை ஊற்றி தீ வைத்துள்ளார். பின்னர், வீட்டின் உரிமையாளர் தீயை அணைத்து, அம்புலன்ஸ் அழைப்பை ஏற்படுத்தி வரவழைத்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

எனினும், நயனா தில்ருக்ஷியே தனது உடலுக்கு தீ வைத்ததாக அந்த வீட்டின் உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மழையால் இடிந்து வீழ்ந்த தலதா மாளிகையின் சுவர்!

கொழும்பு, ஒக். 14

தற்போது பெய்து வரும் கடும் மழையினால் கண்டி சிறீ தலதா மாளிகையின் இடதுபுறத்தில் அமைந்துள்ள பழைய பழைய சுவர் ஒன்று இடிந்து வீழ்ந்துள்ளது.

அரச மாளிகைக்கு முன்னால் உள்ள அகழிக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பக்கவாட்டு சுவரின் மேற்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மண் சுவரின் ஒரு பகுதியே நேற்று முன் தினம் இரவு இடிந்து விழுந்துள்ளது.

கண்டி விஷ்ணு கோவிலுக்கு முன்பாக உள்ள தேவ சம்ஹிந்தாவிற்கு அருகில் உள்ள அகழியின் பக்கவாட்டு சுவரின் ஒரு பகுதி கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் இடிந்து விழுந்தது. தொல்லியல் திணைக்களத்தின் மேற்பார்வையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் இதன் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கட்டுமான பணியின்போது, ஆறு மாதங்களுக்கு முன், ஐந்து மீற்றர் அளவுக்கு பக்கவாட்டு சுவரின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

இம்முறை வரலாற்று சிறப்புமிக்க அரச மாளிகையின் முன் பகுதி இடிந்து விழுந்துள்ளது.

இதனால், அரச மரம் ஆபத்தான நிலையில் உள்ளதால், தொல்பொருள் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு அறிவித்து, அவ்விடத்தை உடனடியாக மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பொதுமுடக்க...

பொது முடக்கத்துக்கு அழைத்த அரசியல்வாதிகளுள் பலர் குபேரர்கள். வசதிகளின் மடியில் வாழ்பவர்கள். சொகுசுகளின் சொப்பனத்தில் மகிழ்பவர்கள். உதவியாளர்களின் ஒத்துழைப்பில் திளைப்பவர்கள் பலர். மக்களின் வரிப்பணத்தை உறிஞ்சுவோர் சிலர்.

இன்று உழைத்தால் நாளைய கஞ்சி. இன்றைய சம்பளம் நாளைய தீபாவளிக்கு. ஈழத் தமிழர் தாயகத்தின் உழைக்கும் தொழிலாளர் 3 இலட்சம் தமிழரின் நிலை.

ரூ 10 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் வரை நாளாந்தம் பணம் புரள உழைப்போர் சிறு வணிகர்கள். அப்புரளலில் தேறும் ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ரூபாய்க்காக நாள் முழுதும் வாடிக்கையாளருக்காகக் காத்திருக்கிறார்கள். இத்தகைய சிறு வணிகர்களின் தொகை 3 இலட்சம் ஈழத் தமிழர் தாயகத்தில்.

பொது முடக்கத்தால் மகிழ்ச்சியடையக் கூடியவர்கள் நாளாந்தம் உழைக்காமல் மாதந்தோறும் வங்கியில் சம்பளத்தைக் குறைவின்றிப் பெறுகின்ற அரச ஊழியர்கள், பொது நிறுவன ஊழியர்கள். அவர்களுள்ளும் கடமை உணர்வாளர் முடங்க விரும்பார். ஈழத் தமிழர் தாயகத்தில் அவர்களின் தொகை 3 இலட்சமே.

ஈழத் தமிழர் தாயகத்தில் பெருவணிகர் தொகை 25 ஆயிரம் - 30 ஆயிரம் பொது முடக்கத்தால் இவர்களுக்கு இழப்பு கணிசமாகும். எனினும், அந்த இழப்பை தாங்கும் வலிமை அவர்களுக்குப் பெருமளவு உண்டு.

சரக்கு உந்துகள், பேருந்துகள் ஓடா. தொடர்வண்டிகள் இடை நிற்கும் விமானங்கள் ஓடா. கப்பலும் ஓடாது. பயண முன்பதிவுடன் காத்திருக்கும் நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள வாய்ப்புகளை எதிர்நோக்கும் இளைஞர் யாவரையும் பொது முடக்கம் கடுமையான உளைச்சலுக்கு உள்ளாக்கும்.

பொதுமுடக்கத்துக்கு அழைத்த குபேரர்களான அரசியல்வாதிகளே, போராட்டங்களால் தொடர்ச்சியாகப் பொருள் இழந்து, ஊக்கம் இழந்து, மெது மெதுவாக மீண்டு, இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர் தாயகத்தின் ஏழைகளான 8 இலட்சம் குடும்பத் தலைவர்கள் மீது, சார்ந்த பொதுமக்கள் மீது பொருளாதார சுமையை ஏற்றாதீர்கள்.

மனிதச் சங்கிலிப் போராட்டத்திற்கு அழைத்தீர்கள். மக்கள் வரவில்லை என்ற குறை உங்களுக்கு. உங்கள் போராட்டம் ஈழத் தமிழர் தாயகம் முழுவதுமாக அமையவில்லை. மருதனார்மடத்தில் போராடினால் முசலியில் உணர்வு ஏறுமா? கொக்குவிலில் போராடினால் கல்முனையில் உணர்வு பீறிடுமா? குளப்பிட்டிச் சந்தியில் மண்டியிட்டால் கொக்கட்டிச்சோலையில் உணர்வு குமுறுமா?

25,000 சதுர கிலோமீற்றர் நீண்டு, அகன்ற தமிழர் தாயகத்தை 5, 6 சதுர கிலோமீற்றர் பரப்புக்குள் முடக்க முயலாதீர்கள். பிரதேச வாதத்தைத் தூண்டாதீர்கள். யாழ்ப்பாணிகள் ஆட்சி எங்களுக்கு வேண்டாம் என ஏனைய பிரதேசத்தவர் கூறும் நிலைக்குத் தள்ளாதீர்கள்

இன்றைய மறுவாழ்வுச் சூழ்நிலையில், தோல்வியால் முடங்கிய விடுதலை உணர்வுகளையும் தோல்வியால் இழந்த தற்சார்பு பொருளாதாரத்தையும் மீட்டெடுக்கும் நிலையில், பொது முடக்கம் போராட்டமாகாது. இயல்பு வாழ்க்கையைக் குழப்புவது போராட்டமாகாது. பொருளாதாரத்தை வீழ்த்துவது போராட்டமாகாது.

பொது முடக்கத்தைக் கோராமல் போராட்ட உத்திகளை மாற்றுங்கள். இயல்பு வாழ்க்கையைக் குழப்பாமல், மீள் வளர்ச்சியை வீழ்த்தாமல் போராட்ட உத்திகளைத் தீர்மானியுங்கள். பொது முடக்க நிவிப்பை மீளப் பெறுங்கள்- என்றுள்ளது.

(ஐ)

## நாகபட்டினம்...

அறிவிக்கப்பட்டது. ஆனால், பல்வேறு காரணங்களால் இந்த நிகழ்வு இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்டது.

இந்தநிலையில், இன்று சனிக்கிழமை காலை 8.15 மணிக்கு நாகை துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்குகிறது.

மத்திய அமைச்சர்கள் ஜெய்சங்கர் (வெளியுறவுத் துறை), சர்வானந்த சோனாவால் (கப்பல் நீர்வழிப் போக்குவரத்து) மெய்நிகர் வழியாக இந்த நிகழ்வில் பங்கேற்பர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக வாழ்த்து செய்தி வழங்குவார். (ஐ)

## பொன்...

1946 ஜூலை 25 ஆம் திகதி பிறந்த பொன்னம்பலம் செல்வராசா, ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தராவார். இவர், கடந்த 1994ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு முதன்முறையாக பாராளுமன்றத்துக்கு தெரிவாகியிருந்தார்.

2001ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோதும், பாராளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை. பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி 2010 தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு மீண்டும் தெரிவாகியிருந்தார். (ஐ)

## தேசியக்...

கட்சியான தேசிய கட்சிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகிறது.

இந்த பொதுத் தேர்தலில் தேசியக் கட்சியின் தேசிய பட்டியலில் வேட்பாளராக இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட பொறியியல் ஆலோசகர் செந்தூரன் அருளானந்தமும் உள்ளார்.

இவர், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ், கொழும்பு றோயல் கல்லூரிகளின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரயிலில்...

சேர்க்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார்.

## குப்பைக்கு....

வீட்டுக் காணியை துப்புரவு செய்த குப்பையை மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துள்ளார். அப்போது அவரின் ஆடையில் தீ பற்றியது. வீட்டிலிருந்தவர்கள் அவரை காப்பாற்றி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். (ஐ)

## பொலிஸ்...

சபையும் அங்கீகரித்திருந்தது.

இந்நிலையில், புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படும்வரை சி.டி .விக்ரமரத்னவின் பதவிக்காலம் 3 வார கால நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசமைப்பு சபையின் ஒப்புதல் தேவையில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேநேரம், பொலிஸ் மா அதிபரின் பதவிக்காலம் கடந்த திங்கட்கிழமையுடன் நிறைவுக்கு வந்தது. எனினும், அவரின் பதவி நீடிப்பு குறித்து உத்தியோகபூர்வ தகவல் எதுவும் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சொந்த...

மத்திய அரசின் கீழ் யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளருக்கு அவரின் பதவிக்கு மேலதிகமாக மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் நியமனம் வழங்கப்பட் டமை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இன்று 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதே எமது அரசியல் நோக்கை அடைவதற்கான நடைமுறை சாத்தியமான முதல்படி என விளங்கிக் கொண்டிருக்கும்வேளையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை மழுங்கடிக்கும் வகையில் ஆளுகையின் செயல்பாடுகள் சில அமைந்திருக்கின்றன.

மத்திய சுகாதார அமைச்சால் யாழ் போதனா மருத்துவமனை பணிப்பாளராக கடமை புரியும் மருத்துவரான அவரது பதவிக்கு மேலதிகமாக மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக் கொள்ளாமல் விடுவதற்கு ஆளுநருக்கு முழுமையான அதிகாரம் உண்டு. இது ஒரு முற்றிலும் பிழையான முன்னுதாரணம் மட்டுமல்ல இதற்கு இடம் விட்டுக் கொடுக்கப்படுமேயானால் மத்தியின் கீழ் செயல்படுகின்ற ஏனைய சேவைகளை சேர்ந்தவர்களும் இதே போல் மத்தியின் அதிகாரிகளாக இருக்கும் அதேவேளையில் மாகாண சபையின் நிர்வாக அதிகாரிகளாகவும் நியமிக்கப்படலாம். இது மாகாண சபை முறைமையை முற்றாகவே மத்திமயமாக்கும் ஒரு செயல்பாடாகும்.

மாகாண சபை முறைமை என்பது எத்தனையோ இயக்கங்களைச் சேர்ந்த போராளிகளின் அர்ப்பணிப்பின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற ஒன்றாகும். மாகாண சபை முறைமை அமுலுக்கு வந்ததிலிருந்து படிப்படியாக மாகாண சபையின் அதிகாரங்கள் மத்தி மயமாக்கப்பட்ட சூழலில் இன்று 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்குவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. ஆனால், இவ்வாறான நியமனங்களும் அதனைக் கண்டு கொள்ளாமல் இருக்கும் ஆளுகைகளும் போராளிகளின் தியாகங்களால் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையை தங்களது சொந்த நலன்களுக்காக மழுங்கடிக்க விடாது நிலைநாட்ட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

வடக்கு மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட சுகாதார நியதிச் சட்டத்தின் பிரிவு 5(1)ன் பிரகாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி என்பது மாகாண சபைக்குரிய விடயமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இந் நியதிச் சட்டம் 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாகாணங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகார வரம்பிற்கு அமைவாக வடக்கு மாகாண சபையால் நிறைவேற்றப்பட்டது. மேலும், இந் நியதிச்சட்டம் அமுலுக்கு வந்த 23.02.2016ஆம் திகதியிலிருந்து (ஆளுநர் நியதிச் சட்டத்தில் ஒப்பமிட்ட திகதி) மத்தியில் சுகாதார சேவைகள் சட்டம் வட மாகாணத்தில் செல்லுபடியாகாது. அது மட்டுமல்ல அந்தத் திகதியிலிருந்து மத்தியில் சுகாதார சேவைகள் சட்டமோ அல்லது அதன் தத்துவத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள், உபவிதிகள் எதுவுமோ இச் சேவையினை கட்டுப்படுத்தாது. இது தொடர்பாக அன்றைய சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் அவர்களினால் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அபிப்பிராயம் கோரியதற்கு, எமது நியதிச் சட்டத்திற்கு முரணான மத்திய சுகாதார சேவையின் தத்துவத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட எவ்வித சுற்றறிக்கைகளும் ஏனையவைகளும் செல்லுபடியற்றதாக என சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டது.

மாகாணசபைகள் ஏற்படுத்தப்பட்டபின் மாகாண சபைகளுக்கான விடயப் பரப்புகளுக்குரிய மாகாண சேவைகளை ஆரம்பிப்பதற்கு தத்துவம் உண்டு. இருந்தும் உயர் பதவியினை வகிப்பவர்கள் முழு நாட்டிலும் சேவை செய்யக் கூடிய அனுபவங்களை பெற்றவராக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அனைத்து இலங்கை சேவையை சேர்ந்த நிர்வாக சேவை, கணக்காளர் சேவை, இயந்திரவியலாளர் சேவை, விஞ்ஞான சேவை, கல்வி நிர்வாக சேவை, திட்டமிடல் சேவை, விவசாய சேவை, கால்நடை வளர்ப்பு சேவை, மருத்துவசேவை போன்ற சேவைகளை சேர்ந்தவர்கள் மத்தியால் மாகாணங்களுக்கு விடுவிப்பதற்கான இணங்கப்பாடு காணப்பட்டது. அவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களை மாகாணங்களில் பதவியில் நியமிப்பது என்பது ஆளுநரையும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவையும் சார்ந்தது.

இன்று மருத்துவ சேவையை தவிர்ந்த மேலே குறிப்பிடப்பட்ட சகல உத்தியோகத்தர்களினதும் இட நியமனம் மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவாலே கையாளப்படுகிறது. ஆனால், மருத்துவ சேவையை சேர்ந்த வர்களை மட்டும் இதுவரை மத்திய அமைச்சு மாகாணத்துக்கு விடுவிப்ப தோடு நின்றுவிடாமல் அவர்களினது இட நியமனத்தையும் செய்து வந்துள் ளது. இது முழுக்க முழுக்க 13வது திருத்தச் சட்டத்துக்கும் மாகாண சபை சட்ட மூலத்துக்கும் முரண்பாடான செயலாகும். இவ்வாறான நியமனங்கள் அரசியல் அமைப்புக்கும் - மாகாண சபைகள் சட்டத்துக்கும் முரண்பாடாக இருக்கலாகாது என்பதற்காக அவ்வாறு இட நியமனம் பெற்றவர்களிற்கு ஆளுநர்கள் மீளவும் நியமனங்கள் வழங்குவது நடைமுறையாக வந்துள்ளது. ஆனால், ஆளுநர் அவ்வாறு நியமனம் வழங்க மறுப்பாராயின் மத்தியினால் வழங்கப்பட்ட நியமனம் செல்லுபடியற்றது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## காஸாவின்...

சம்பவங்கள் இலங்கையின் இறுதிப் போரின் ஆரம்ப தருணங்களை நினைவுபடுத்துகின்றன. அக்காலப்பகுதியில் இலங்கையில் பொதுமக்கள் அரசாங்கம் அறிவித்த உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

இதன் பிரதான விளைவு என்னவென்றால் தொடர்ச்சியான எறிகணை தாக்குதலால் பொதுமக்களின் உயிரிழப்புகள் பல மடங்காக அதிகரித்தன. பொது மக்கள் மத்தியில் இருந்த விடுதலைப் புலிகளை இராணுவம் தாக்கியது. இது மக்களையும் அதிகளவில் பாதித்தது.

எதிர்வரும் நாட்களில் காசாவில் இதுபோன்ற சூழ்நிலை ஏற்படாது என நம்புகின்றேன் - பிரார்த்திக்கின்றேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## இந்து...

புதிய தகவல்கள் அடங்கிய இந்த அறிக்கையை எதிவரும் புதன்கிழமை பாராளுமன்ற அமர்விலும் சமர்ப்பிக்கவுள்ளார் என்றும் அவர் ஈழநாடுவுக்கு தெரிவித்தார்.

பிரிட்டனின் அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். அவரை தமிழ்த் தேசிய அரசியல் கட்சியினர் சந்தித்துப் பேசியிருந்தனர். இதன்போதே தான் தயாரித்த புதிய அறிக்கையை சிறீதரன் எம். பி. அமைச்சரிடம் வழங்கினார்.

இந்த அறிக்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அண்மையில் அமைக்கப்பட்ட 80 விகாரைகள் குறித்த விவரங்ளையும் இதில் சில இந்து ஆலயங்களை அழித்து அவை இருந்த இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன என்றும் வரலாற்று ஆதாரங்களுடன் சுட்டிக்ககாட்டியுள் ளாரென சிறீதரன் எம். பி. குறிப்பிட்டார்.

இந்த அறிக்கையை எதிர்வரும் புதன் கிழமை நடைபெறவுள்ள பாராளுமன்ற அமர்வில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# விபத்தில் இளைஞர் பலி!

கிளிநொச்சி, ஒக். 14

கிளிநொச்சி - கோணாவில் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இரு சக்கர உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிகளில் மாற்றம் இல்லை

## மத்திய குழு தீர்மானம்

கொழும்பு, ஒக். 14

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய நிலைப்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தாதிருக்க கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்றுமுன் தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவை நியமிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டபோதிலும் தற்போதைய பதவி நிலைகளில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடாது என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

மேலும், கட்சியின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் ஆகிய பதவிகளைத் தவிர ஏனைய அனைத்து பதவிகளையும் நீக்கி, தலைமைக் குழுவை நியமிப்பதற்கு முன்னதாக முன்மொழியப்பட்டது.

இருப்பினும் குறித்த யோசனையை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியமில்லை என கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியை கட்டம் கட்டமாக முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தற்போதைய தலைவர்கள் மிகவும் சிரத்தையுடன் செயற்பட்டு வருவதாகவும் எதிர்கால வேலைகளையும் தொடரக்கூடிய திறமை அவர்களுக்கு இருப்பதாகவும் மத்திய குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# விருப்ப ஓய்வு வழங்க அரசாங்கம் அனுமதி

கொழும்பு, ஒக். 14

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு விருப்ப ஓய்வு இழப்பீடு வழங்க அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படும் நிர்மாண பணிகள் பொருளாதார நெருக்கடியால் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதன் தலைவர் ரத்னசிறி கலுபஹன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், திணைக்களத்தின் 1500 இற்கும் அதிகமான ஊழியர்கள் ஓய்வு பெற முன்வந்துள்ளனர். இருப்பினும், அவர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் இழப்பீடுகளை வழங்குவதற்கான நிதி திறைசேரியால் அனுமதிக்கப்படாததால், திணைக்களம் கடந்த சில மாதங்களாக நெருக்கடியைச் சந்தித்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், ஓய்வூதியம் வழங்குவதற்காக அரசாங்கம் 376.4 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. அரச பொறியியல் கூட்டுத்தாபனம் தற்போது கட்டிட நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதில்லை எனவும், பராமரிப்பு சேவைகள், வழிகாட்டல் மற்றும் முன்னர் ஒப்பந்தம் செய்யப்பட்ட சிமெந்து உற்பத்திப் பணிகளில் மாத்திரமே ஈடுபடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஜனாதிபதி ரணிலின் சீனப் பயணம் முதலீடுகளை இலங்கைக்கு ஈர்க்கும்

## சீனாவுக்கான முன்னாள் தூதுவர் நம்பிக்கை

கொழும்பு, ஒக். 14

**இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சீன விஜயத்தின் ஊடாக கொழும்பு துறைமுக நகரத்திற்கு சீன முதலீடுகளை கொண்டுவரப்படும் என சீனாவுக்கான இலங்கை தூதுவராக பதவி வகித்து இலங்கை திரும்பியுள்ள கலாநிதி பாலித கொஹோன தெரிவித்தார்.**



"கொழும்பு துறைமுக நகரத்தை நிர்மாணித்த சீன ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனம் மற்றும் ஹூனான் கன்ஸ்ட்ரக்ஷன் இன்ஜினியரிங் குரூப் கோ லிமிடெட் ஆகிய இரண்டு பெரிய சீன நிறுவனங்கள் கொழும்பு துறைமுக நகரத்தில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் முதலீடு செய்ய வாய்ப்புள்ளது.

கண்டி வழியான மத்திய நெடுஞ்சாலையையும் சீனா அமைக்கும் எதிர்பார்ப்பில் சீனா உள்ளது. ஜனாதிபதியின் விஜயத்தின்போது இதற்கான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படும்" - என பாலித கொஹோன கூறியுள்ளார்.

கடனைத் திருப்பிச் செலுத்தலை ஒத்திவைக்க சீனா முன்மொழிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுவதுடன், கடனுதவி பெறுவதற்குப் பதிலாக சீன முதலீட்டை இலகுபடுத்துமாறு இலங்கைக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

துறைமுக நகரத்திலும் அம்பாந்தோட்டை துறைமுகத்திலும் முதலீடு செய்யத் தொடங்குவதன் மூலம் சீனா இலங்கையின் பொருளாதாரத்துக்கு பலமளிக்கும் என கருதப்படுகிறது.

சீன எண்ணெய் நிறுவனமான சினோபெக் இலங்கையில் எரிபொருள் விநியோக வியாபாரத்தில் அண்மையில் முதலீடு செய்தது.

இலங்கைக்கு சீனா வழங்கியுள்ள கடனைப் பற்றி கருத்து வெளியிட்டுள்ள பாலித கொஹோன, "பாரிய உட்கட்டமைப்புத் திட்டங்கள் உடனடியாக வருவாயை எதிர்பார்க்க முடியாது.

அவை புதிய பொருளாதார நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகளைத் திறக்கின்றன. அது படிப்படியாக மக்களுக்கு வருமானத்தை உருவாக்கும்.

பாதைகள், ரயில்வே மற்றும் துறைமுகங்கள் போன்ற உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக வளரும் நாடுகள் ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதற்கு இதுதான் காரணம்" என்றார். (அ)

## இந்திய-இலங்கை இடையே மின் இணைப்பு;

# முக்கிய இணைப்பு புள்ளிகளாக மன்னார், மதுரை அடையாளம்!

கொழும்பு, ஒக். 14

இலங்கையின் வடமேற்குப் பகுதியில் உள்ள மன்னார் மற்றும் தென்னிந்தியாவில் உள்ள மதுரை ஆகிய பகுதிகள் இரு நாடுகளுக்கும் இடையே முன்மொழியப்பட்ட மின்சாரம் கடத்தும் பாதையின் இணைப்புப் புள்ளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இரு நாடுகளின் மின்துறை செயலாளர்கள் தலைமையிலான செயற்குழுவின் பரிசீலனைகளின் பிரகாரம் இந்த புள்ளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மின்சார இணைப்பு திட்டம் 2003 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட ஒரு யோசனையாகும். ஆனால், இலங்கையில் ஏற்பட்ட அசாதாரணமான சூழ்நிலைகளால் இதற்கான வேலைத்திட்டம் இப்போதுதான் இறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய இந்திய விஜயத்தின் முடிவின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இந்த திட்டமும் முன்மொழியப்பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்டுள்ள இந்த இணைப்பு புள்ளிகள் பின்னர் மாற்றப்படாவிட்டால், முன்மொழி யப்பட்ட மின் பாதையின் மொத்த தூரம் 280-300 கிலோமீற்றர்களாக இருக்கும்.

திட்டத்தை நிறைவேற்றுவதில் இலங்கை தரப்பினர் கடலுக்கு அடியில் கேபிள்கள் மற்றும் மேல்நிலை கம்பிகள் இரண்டையும் விருப்பத்திற்குரியதாக முன்மொழிந்துள்ளது.

முதற்கட்ட மதிப்பீட்டின்படி, 400 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் இந்தத் திட்டத்துக்காக செலவாகும்.

ஆனால், கடலுக்கடியில் முழுமையான கேபிள்களை பயன்படுத்தி இத்திட்டத்தை முன்னெடுத்தால் செலவு இதனையும் விட அதிகமாக இருக்கும் எனவும் இத்திட்டத்தை ஆய்வு செய்யும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு முன்மொழிவுகளை சமர்ப்பித்த இலங்கைத் தனியார் கடன் வழங்குநர்கள்

கொழும்பு, ஒக். 14

12 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனை எவ்வாறு மறுசீரமைப்பது என்பது தொடர்பான முன்மொழிவுகளை இலங்கையிலுள்ள தனியார் கடன் வழங்குநர்கள் குழுவொன்று சமர்ப்பித்துள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, இந்த முன்மொழிவில் எதிர்காலத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் நிலையில் கடனை மீள செலுத்துவதனை எளிதாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட புதியவகை பாத்திரம் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூலதனம் மற்றும் வட்டி ஆகிய இரண்டு விடயங்கள் தொடர்பிலும் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

22 மில்லியன் மக்கள் தொகையை கொண்ட இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் கடுமையான டொலர் பற்றாக்குறை காரணமாக மோசமான நிதி நெருக்கடியை எதிர்கொண்டதுடன், 2022 ஆம் ஆண்டு மே மாதம் முதலாவது வெளிநாட்டுக்கு கடனை மீள செலுத்த முடியாத நிலையை அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன், இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள சில பொருளாதார இலக்குகளை அடைவதற்கு தவறும் பட்சத்தில், 2027 ஆம் ஆண்டு முதல் சலுகை கொடுப்பனவுகள் தானாக குறையுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மறுசீரமைப்பு முன்மொழிவுகள் சர்வதேச நாணய நிதியத்தின் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்திற்கான திட்டத்திற்கு ஒப்புகொண்டபோது உருவாக்கப்பட்ட கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வின் அளவுகோலை அடிப்படையாக கொண்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது முன்மொழிவின் நகல் சர்வதேச நாணய நிதியம் மற்றும் பாரிஸ் கழக செயலகம் ஆகியவற்றுக்கு அனுப் பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது எனவும் ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது. (அ)

# மாலைதீவு பிரஜை கைது

கொழும்பு, ஒக். 14

சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்தபோது ஒரு இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டின் கீழ் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 32 வயதுடைய மாலைதீவைச் சேர்ந்த பிரஜை என பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் தொடர்பில் நீர்கொழும்பு விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த போது, சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# ஆஸியை வீழ்த்தியது தென்னாபிரிக்கா!

லக்னோ, ஒக். 14

நடப்பு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 10ஆவது போட்டியில் அவுஸ்திரேலிய அணியை 134 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி உள்ளது தென்னாபிரிக்க அணி.

லக்னோ கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி களத்தடுப்பைத் தெரிவு முதலில் பேட் செய்த தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 311 ஓட்டங்கள் எடுத்தது.

தொடக்க கொடுத்த குயின்ரன் டி கொக், 106 பந்துகளில் 109 ஓட்டங்கள் எடுத்தார். மார்க்ரம், 44 பந்துகளில் 56 ஓட்டங்கள் எடுத்தார். பவுமா (35 ஓட்டங்கள்), கிளாசன் (29 ஓட்டங்கள்), வான்டர் டுசன் மற்றும் மார்கோ யான்சென் தலா 26 ஓட்டங்கள் எடுத்தனர்.

312 ஓட்டங்கள் எடுத்த வெற்றி என்ற இலக்கை அவுஸ்திரேலியா விரட்டியது. தொடக்கம் முதலே சீரான இடைவெளியில் விக்கெட்டை இழந்தது. மார்ஷ், வோர்ணர், ஸ்மித், ஜோஷ் இங்க்லிஸ், மக்ஸ்வெல், ஸ்ரொய்னிஸ், ஸ்டார்க், லபுஷான், கம்மின்ஸ், ஹசில்வூட் ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதில் லபுஷான், 74 பந்துகளில் 46 ரன்கள் எடுத்திருந்தார். 40.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 177 ஓட்டங்கள் எடுத்தது அவுஸ்திரேலியா. இதன் மூலம் தென்னாபிரிக்கா 134 ஓட்டங்களில் வெற்றி பெற்றது. இதுவரை நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் 2 போட்டிகளில் விளையாடி உள்ள தென் ஆப்பிரிக்க அணி இரண்டிலும் வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் புள்ளிப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது தென்னாபிரிக்கா.

ரபாடா 3 விக்கெட்களை வீழ்த்தி இருந்தார். யான்சன், கேஷவ் மகாராஜ், ஷம்ஸி ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தி இருந்தனர். நிகிடி ஒரு விக்கெட்டை கைப்பற்றி இருந்தார்.

சதம் பதிவு செய்த டி கொக் ஆட்டநாயகன் விருதை வென்றார். (ஐ)

## ஐ. சி. சியின் சிறந்த வீரர் ஷூப்மன் கில் தெரிவு




டுபாய், ஒக். 14

ஐ. சி. சியின் செப்ரெம்பர் மாதத்துக்கான சிறந்த வீரராக இந்தியாவை சேர்ந்த ஷூப்மன் கில் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி) ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்து கௌரவித்து வருகிறது. இதன்படி செப்ரெம்பர் மாதத்துக்கான சிறந்த வீரர்களாக மூவரின் பெயர்களை ஐ. சி. சி. அறிவித்திருந்தது.

இதன்படி செப்ரெம்பர் மாதத்துக்கான சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் இந்திய வீரர்களான ஷூப்மன் கில், முகமது சிராஜ் மற்றும் இங்கிலாந்து வீரரான டேவிட் மலன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

அதில் சிராஜ் மற்றும் மலனை பின்னுக்கு தள்ளி செப்ரெம்பர் மாதத்துக்கான சிறந்த வீரராக ஷூப்மன் கில் தெரிவானார். கில் செப்ரெம்பர் மாதம் மட்டும் 80 சராசரியுடன் 480 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

## மருத்துவமனைகளில் குவியும் ரசிகர்கள்!

அகமதாபாத், ஒக். 14

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இடையிலான லீக் ஆட்டம் அகமதாபாத்தில் இன்று நடைபெறவுள்ளது. இந்த போட்டிக்கான ரிக்கெற்றுகள் அனைத்தும் விற்று தீர்ந்துள்ளன.

7 வருடங்களுக்கு பிறகு பாகிஸ்தான் அணி இந்தியாவுக்கு எதிராக இந்திய மண்ணில் விளையாட உள்ளது. இந்த ஆட்டத்தை காண கோடிக்கணக்கான ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

ஹோட்டல்கள் நிறைந்து வருவதால், ரசிகர்கள் மருத்துவமனைகளில் நிறைந்து வருகின்றனர். உடல் பரிசோதனை என்ற பெயரில் போட்டி நடைபெறும் நாளில் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை எடுத்துக் கொள்ளும் வகையில் பலர் மருத்துவ மனைகளை அணுகி வருகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)



## இந்தியா - பாக். இன்று மோதல்!

அகமதாபாத், ஒக். 14

உலகக் கிண்ணத்தில் அகமதாபாத்தில் இன்று நடைபெறும் போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

உலகக் கிண்ண வரலாற்றில் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான உறவு என்பது மிகவும் வித்தியாசமானதாக உள்ளது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் இரு நாடுகளுமே கிரிக்கெட்டை மிகவும் நேசிக்கும் நாடுகள்.

உலகக் கிண்ண வரலாற்றில் 50 ஓவர் போட்டிகளில் இதுவரை இந்தியா - பாகிஸ்தான் அணிகள் 7 முறை மோதியுள்ளன. இந்த 7 போட்டிகளிலும் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது. இந்த நிலையில், இன்று அகமதாபாத்தில் நடை பெறும் போட்டியில் 8ஆவது முறையாக இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

இரு அணிகளுக்கும் இடையிலான இந்தப் போட்டிக்கான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. இந்த உலகக் கிண்ணத் தொடரில் இதுவரை இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு அணிகளுமே தங்களது முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளன. இரு அணிகளும் சம பலத்துடன் இருப்பதால் இன்று நடைபெறும் போட்டியில் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது. (ஐ)

## சிறந்த வீராங்கனையாக சமரி அத்தப்பத்து தெரிவு

டுபாய், ஒக். 14

ஐ. சி. சியின் செப்ரெம்பர் மாதத்துக்கான சிறந்த வீராங்கனையாக இலங்கை அணியின் தலைவி சமரி அத்தப்பத்து தெரிவாகியுள்ளார்.


சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்து கௌரவித்து வருகிறது. இதன்படி செப்ரெம்பர் மாதத்துக்கான சிறந்த வீராங்கனைகளாக மூவரின் பெயர்களை ஐ. சி. சி. அறிவித்திருந்தது.

சிறந்த வீராங்கனை விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் தென்னாபிரிக்க வீராங்கனைகளான லாரா வோல்வார்ட் மற்றும் நாடின் டி கிளார்க்கும், இலங்கை அணியின் சமரி அத்தபத்துவும் இடம் பெற்றிருந்தனர்.

இதில், சிறந்த வீராங்கனையாக இலங்கை அணியின் தலைவி சமரி அத்தப்பத்து தெரிவானார். (ஐ)




## "முடிவை எதிர்பார்த்து நான் பந்துவீசுவதில்லை"



புதுடில்லி, ஒக். 14

நான் முடிவுகளை எதிர்பார்த்து பந்துவீசுவதில்லை என்று கூறியுள்ளார் இந்திய அணியின் பந்துவீச்சாளர் பும்ரா. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் துடுப்பாட்டத்துக்கு சாதகமான மைதானத்தில் அவர் 4 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார்.

போட்டி முடிவடைந்த பின்னர் அவர் கருத்து வெளியிடுகையில்,

"நான் முடிவுகளை எதிர்பார்த்து பந்துவீசுவதில்லை. 4 விக்கெட்களை எடுத்து விட்டதால் மட்டும் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று அர்த்தம் ஆகாது. 4 விக்கெட்களை எடுத்ததால் நான் பெரிதாக எதனையும் சாதித்து விட்டேன் என்றும் கிடையாது. தொடர்ந்து சிறப்பாக பந்துவீசுவதில் கவனம் செலுத்துகிறேன். அதுதான் மிகவும் முக்கியம். ஆடுகளம் எப்படி இருக்கிறது என்பதை கணித்து அதற்கேற்ப பந்துவீசுகிறேன்" - என்றார். (ஐ)

# பூமிக்கு வந்த ‘பெனு”!

சிதம்பரம் இரவிச்சந்திரன்



அன்று செப்டம்பர் 24, 2023. ஞாயிற்றுக்கிழமை. அமெரிக்கா யூட்டா பாலைவனப் பகுதியில் சால்ட் லேக் என்ற இடத்திற்கு அருகில் விண்ணில் இருந்து வரும் ஒரு பொக்கிஷத்திற்காக விஞ்ஞானிகள் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தனர். ஒரு பாராசூட் திறந்து அதில் இருந்த கலன் சுமார் 250 கிராம் கல் மற்றும் துகள்களுடன் தரையில் இறங்கியது. அப்போது நான்கு ஹெலிகாப்டர்களில் விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் மற்றும் ராணுவப் பாதுகாப்பு அதிகாரிகள் மிக உயர்ந்த மதிப்புடைய அந்த சரக்குப் பேழையை சேகரித்தனர்.

இவை வெறும் பழைய கல் மண் இல்லை. அவை 4.6 பில்லியன் ஆண்டுப் பழமையான விண்கல் பாறைப் பகுதிகள். கோள்கள் உருவான கதை மட்டுமில்லாமல் உயிர் எவ்வாறு உருவானது என்ற கதையையும் சொல்லும் அரிய கருவூலம். இவை நம் சூரியக் குடும்பத்தில் உருவான மிகப் பழமையான பொருட்களில் ஒரு பகுதி என்று லண்டனில் உள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தின் ஆய்வாளர் ஆஷ்லி கிங் (Ashley King) கூறுகிறார்.

இது போன்ற விண்கற்களின் மாதிரிகள் பூமியைப் போல ஒரு கோள் உருவாக அடிப்படையான பகுதிப் பொருட்கள் எவை என்பதை எடுத்துச் சொல்லும் திறன் படைத்தவை. இப்பொருட்களில் எவை எவை ஒன்று சேர்ந்து கலந்து உயிர்கள் வாழும் சூழலை உருவாக்கின என்று இவற்றை ஆராய்வதன் மூலம் அறிய முடியும்.

நாசாவின் ஓசைரிஸ் ரெக்ஸ் (Osiris-Rex) என்ற இந்த தொலைதூரப் பயணத்தில் இருந்து பூமிக்கு வந்த ஆய்வுக்கலனின் இறுதிக்கட்ட தரையிறங்கும் நிகழ்வு ஒரு திகில் திரைப்படத்தின் ஆரம்பக் காட்சிகள் போல இருந்தது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.


ஏழாண்டு விண்வெளியில் பயணம் செய்து பூமிக்குத் திரும்பி வந்துள்ள இந்தக் கலன் ஒரு போக்குவரத்து வேன் அளவுள்ளது. இதில் உள்ள தானியங்கி ரோபோட்டிக் விண்கலன் விண்வெளியில் சுற்றி வரும் பெனு (Bennu) விண்கல்லை ஆராய்ந்து அங்கு இருந்து கல்லையும் மண்ணையும் சேகரித்து வர உதவும் பேடகத்துடன் அனுப்பப்பட்டது. மணிக்கு 27,650 மைல் வேகத்தில் பயணித்து ஓசைரிஸ் ரெக்ஸ் கலன் பூமியின் எல்லைக்கு வந்த பின் கல்லும் மண்ணும் உள்ள பேடகத்தை விடுவித்தது. பேடகம் நான்கு மணி நேரம் பயணம் செய்து பூமியை அடைந்தது.

பாராசூட்களின் வழிகாட்டலுடன் பேடகம் மணிக்கு பதினோரு கிலோமீட்டர் வேகத்தில் பூமியில் மென்மையாக விழுந்தது. தரையைத் தொட்டவுடன் இந்தப் பேடகம் கடின உலோகப் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டு ஹெலிகாப்டர் மூலம் அருகில் இருக்கும் தற்காலிக ஆய்வு நிலையத்திற்கு அனுப்பப்பட்டது. மறுநாள் இது ஹூஸ்டனில் இருக்கும் நாசாவின் ஜான்சன் விண்வெளி மையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பேடகம் இறங்கும்போது அதனால் பூமிக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. உள்ளே இருக்கும் கல்லும் மண்ணும் எந்த மாசுக் கலப்பும் ஏற்படாமல் தூய நிலையிலேயே இருப்பதாக ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். இதற்காக பேடகத்தின் வெளிப்பகுதி நைட்ரஜனைப் பயன்படுத்தி மாசு நீக்கம் செய்யப்பட்டது.

## பூமியில் மோதும் ஆபத்துள்ள விண்கற்களை அறிய

பூமிக்கு ஆபத்தாக உள்ள விண்கற்களின் வருகையை முன்கூட்டியே கணித்து அவற்றில் இருந்து எவ்வாறு பூமியைப் பாதுகாப்பது என்பது இத்திட்டத்தின் ஒரு முக்கிய நோக்கம். மாதிரியின் அடர்த்தி மற்றும் கடினத் தன்மை போன்ற இயற்பியல் பண்புகள் ஆராயப்படுகிறது. பெனு விண்கல் 2100ம் ஆண்டின் நடுப் பகுதியிலிருந்து தொடங்கி 2300ம் ஆண்டு வரை உள்ள காலத்தில் 1750 வாய்ப்புகளில் பூமியின் மீது மோத ஒரே ஒரு வாய்ப்பு மட்டுமே உள்ளது என்று நாசா விண்கல் நிபுணர்கள் கூறுகின்றனர்.



பெனுவின் கார்பன் செழுமை நிறைந்த தரைப்பரப்பு, அங்ககப் பொருட்கள் மற்றும் நீர் போன்ற பொருட்கள் பூமியில் உயிர் உருவாக உதவியனவா என்பது பற்றி ஆராயப்படும். வரும் நாட்களில் இம்மாதிரிகளில் உள்ள தாதுக்கள் மற்றும் அவை கலந்து உருவான பொருட்கள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இதில் நீர் கலந்துள்ள தாதுக்கள் பற்றி முக்கியமாக ஆராயப்படும்.

மாதிரியின் ஒரு பகுதி கனடா மற்றும் ஜப்பான் விண்வெளி முகமை ஆய்வாளர்கள் ஆராய அனுப்பப்படும். மாதிரியின் மீதியிருக்கும் பகுதி வருங்கால ஆய்வுகளுக்காகப் பாதுகாக்கப்படும். லண்டன் இயற்கை வரலாறு அருங்காட்சியகத்தின் ஆய்வாளர் மற்றும் ஓசைரிஸ் திட்டத்தின் தாதுப்பொருட்கள் மற்றும் பாறைகள் பற்றிய அறிவியல் பிரிவின் துணைத்தலைவர் பேராசிரியர் சாரா ரஸெல் (Prof Sara Russell) ஸ்கேனிங் எலக்ட்ரான் நுண்ணோக்கி போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மாதிரிகளை ஆராய்வார்.



## கோள்கள் உருவான கதை

இந்த மாதிரிகளில் சூரியக் குடும்பம் உருவானபோது உண்டான சிறு துகள்கள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. கோள்கள் உருவாகும் முன்பு இத்துகள்கள் விண்வெளியில் சுதந்திரமாக மிதந்து கொண்டிருந்த தூசுப்பொருட்கள் என்பதால் அப்போது இருந்த சூழல், கோள்கள் உருவாக எவ்வளவு காலம் பிடித்தது, விண்கல்லின் வரலாற்றில் அங்கு உள்ள தாதுப்பொருட்கள் அடைந்த மாற்றங்கள், அப்போது இவற்றில் இருந்த நீரின் அளவு, விண்கல்லில் நிலவிய வெப்பநிலை, அதில் ஏற்பட்ட மாறுதல்கள் போன்றவற்றை ஆராய்வதால் அறிய முடியும்.

பல விண்கற்களில் இருந்தும் முந்தைய ஜப்பானின் ஆய்வுக்கலன்கள் சிறிய அளவில் மாதிரிகளை எடுத்து வந்தன. என்றாலும் இதுவரை அனுப்பப்பட்டதில் ஓசைரிஸ் ரெக்ஸ் கலனே விண்கல்லில் இருந்து மிக அதிக அளவில் கல்லையும் துகள்களையும் சேகரித்துள்ளது. எப்போது உருவாயின என்று தெரியாத, பூமியின் வளிமண்டலத்தில் நுழையும் போது பல்வேறு மாசுகளால் பாதிக்கப்படும் எரிகற்களைக் காட்டிலும் பெனு போன்ற விண்கல்லில் இருந்து எடுத்து வரப்படும் மாதிரிகள் விஞ்ஞானிகளுக்கு பல அரிய தகவல்களைத் தரும் என்று கருதப்படுகிறது.

## நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஆய்வுகள்

பெனுவின் துகள்களை வெப்பப்படுத்தி அவை உமிழும் அகச்சிவப்புக் கதிர்களை ஆராயும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர் பேராசிரியர் நீல் ஃபோல்ஸ் (Prof Neil Bowles) ஆய்வக ஆய்வு முடிவுகள் ஓசைரிஸ் ரெக்ஸ் ஆய்வுக்கலன் அனுப்பிய தகவல்களுடன் ஒப்பிட்டு ஆராயப்படும் என்று கூறுகிறார்.

பூமிக்கு எடுத்து வந்து ஆராய்வதால் தொலைநோக்கிகள் அல்லது விண்கலன்கள் மூலமே ஆராயப்படும் சூரியக் குடும்பத்தின் மற்ற விண்கற்களைப் பற்றி கூடுதலாக அறிய உதவும் என்று ஆக்ஸ்போர்டு ஆய்வுக்குழுவுடன் இணைந்து பணிபுரியும் மத்திய ப்ளோரிடா பல்கலைக்கழகத்தின் கோள் புவியியல் நிபுணர் கெர்ரி டொனால்ட்ஸன் ஹேனா (Kerri Donaldson Hanna) கூறுகிறார்.

பெனுவின் கற்களும் துகள்களும் நாம் வாழும் இந்த பூமியின் கதையைப் நாம் இதுவரை அறியாத புதிய தகவல்களைத் தரும் என்று விஞ்ஞானிகள் காத்திருக்கின்றனர். ●

ஈழநாடு



# பாலத்தீனம் கனவை ஹமாஸ் தாக்குதல் தகர்த்துவிடுமா? அதை விடுதலைப் புலிகளுடன் ஒப்பிடுவது சரியா?

வினீத் காரே

இஸ்ரேலைத் தாக்குவதன் மூலம் பாலத்தீனர்களின் உரிமைகளைப் பற்றி அக்கறை கொண்ட பலரை நீங்கள் விலக்கி வைத்துள்ளீர்கள், அவர்களின் நோக்கத்தைப் பல ஆண்டுகள் பின்னோக்கித் தள்ளியிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணர்கிறீர்களா?

பிரிட்டிஷ் தொலைக்காட்சி சேனலின் இந்தக் கேள்விக்கு பதிலளித்து, ஹமாஸின் அரசியல் மற்றும் சர்வதேச உறவுகளுக்கான தலைவர் பாசம் நயீம், உலகில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் தொடர்ந்து தங்களுக்கு ஆதரவளிப்பார்கள் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆனால், அவரது கூற்று எவ்வளவு உண்மை?

1948-ல் இஸ்ரேல் உருவானதிலிருந்து இதுவரை இஸ்ரேலுக்குள் இவ்வளவு பெரிய அளவில் வன்முறை நிகழ்ந்தது இதுவே முதல் முறையாகும்.

பாலத்தீன அமைப்பான ஹமாஸின் தாக்குதலில் இஸ்ரேலில் குறைந்தது 1,000 பேர் கொல்லப்பட்டனர், அதேநேரத்தில் காசாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் 700-க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளதாக கூறப்படுகிறது.

காசா பகுதியில் சுமார் 20 லட்சம் மக்கள் வசித்து வருகின்றனர், அவர்களில் பெரும்பாலானோர் மனிதாபிமான உதவியை நம்பியே உள்ளனர். இரு தரப்பிலும் கொல்லப்பட்டவர்களில் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பெண்கள் அடங்குவர்.

ஹமாஸ் ஆயுதக் குழுவினர் இசை விழாக்களில் நடனமாடி கொண்டிருந்த இளைஞர்களைக் கொலை செய்வது, குடும்பங்கள், குழந்தைகள், பெண்களை கடத்திச் செல்வது, வீடுகளுக்குள் நுழைந்து மக்களை கொலை செய்வது போன்ற படங்களை சமூக வலைதளங்களில் கோடிக்கணக்கான மக்கள் பார்த்துள்ளனர். இதைப் பார்த்து உலகம் அதிர்ச்சியடைந்துள்ளது.

மறுபுறம், காசாவில் பழிக்குப் பழி வாங்கும் வகையில் கொல்லப்பட்ட மக்களின் படங்கள் மற்றும் வீடியோக்களும் சமூக வலைதளங்களில் வெளியாகி வருகின்றன. அவை மிகவும் வேதனையளிக்கக் கூடியவை.




நோர்வே அகதிகள் கவுன்சிலின் ஜான் எகெலண்ட் ஒரு தொலைக்காட்சி சேனலில், ‘இந்த படங்கள் உலகம் முழுவதும் பரவி வருகின்றன. இது பாலத்தீனர்களின் நோக்கத்துக்கு (அவர்களின் உரிமைகளுக்கு) மிகவும் மோசமானது, ஏனெனில் பெரிய அளவில் பழிக்குப் பழி வரும்” என்று கூறினார்.

கடத்தப்பட்ட பிணைக் கைதிகளை கொலை செய்வதாக ஹமாஸ் மிரட்டியுள்ளது.

பாலத்தீனர்களுக்கு ஆதரவாக முழக்கங்கள் எழுப்பப்பட்ட ஐரோப்பா, கனடா, ஆஸ்திரேலியா, மத்திய கிழக்கு நாடுகள், இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட பல நாடுகளின் அரசாங்கங்கள் இன்று ஹமாஸின் தாக்குதல்களை கண்டித்துள்ளன.

மூத்த பத்திரிகையாளர் மேதி ஹசன் ஓ தளத்தில், “குழந்தைகள் பிணையாக பிடிக்கப்பட்டிருப்பது உண்மை என்றால், அது மிருகத்தனம், அது அமைதிக்கும் வழிவகுக்காது, இஸ்ரேலிய ஆக்கிரமிப்பையும் முடிவுக்கு கொண்டு வராது” என்று எழுதியுள்ளார்.

சதம் ஹவுஸ் சிந்தனை குழுமத்தின் பேராசிரியரான யோசி மெகெல்பெர்க், ‘இந்தத் தாக்குதல் பாலத்தீனர்களுக்கு எந்த பயனும் அளிக்காது. இது இஸ்ரேலின் தடைவிதிப்பு கொள்கையை மேலும் வலுப்படுத்தும். தாக்குதலின் நோக்கம் இஸ்ரேலின் பக்கத்து நாடுகளுடன் உறவுகளை மேம்படுத்துவதைத் தடுப்பதாக இருந்தால், இந்த தாக்குதல்கள், பணயக் கைதிகளை எடுத்துச் சென்ற நடவடிக்கைகள் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் மற்றும் பிராந்திய தலைவர்களுக்கு பாலத்தீனத்திற்கு பேச்சுவார்த்தைக்கான நம்பகமான கூட்டாளி இல்லை என்ற செய்தியை அனுப்பும்” என்று எழுதுகிறார்.

பாலத்தீனர்கள் ஆபிரகாம் உடன்படிக்கையின் கீழ் மத்திய கிழக்கு நாடுகளுடன் இஸ்ரேலின் உறவுகள் மேம்படுவதைப் பார்த்துள்ளனர்.

பல நிபுணர்களும், தாக்குதலுக்கான காரணங்களில் ஒன்று இஸ்ரேலுக்கும் சவூதி அரேபியாவிற்கும் இடையிலான அமெரிக்கா தலைமையிலான பேச்சுவார்த்தைகள் என்று கூறுகின்றனர். பாலத்தீனர்களுக்கு இந்த ஒப்பந்தத்தால் மிகப்பெரிய இழப்பு ஏற்படும் மற்றும் அவர்களின் உரிமைகள் என்றென்றும் பின்னால் விடப்படும் என்ற செய்தியை இந்த பேச்சுவார்த்தைகள் அனுப்பின.






பாலத்தீனத்திற்கான ஆதரவு இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய பகுதியாக இருந்து வருகிறது, ஆனால் கடந்த சில ஆண்டுகளில் இந்தியா-இஸ்ரேல் உறவுகள் ஆழமடைந்துள்ளன.

பாலத்தீன நிறுவனமான ஹமாஸின் தாக்குதலை இந்திய பிரதமர் நரேந்திர மோதி ‘பயங்கரவாத தாக்குதல்” என்று விவரித்தது அதே கோணத்தில் பார்க்கப்படுகிறது.

‘தி இந்து’ பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் மாலினி பர்த்தசாரதி ஓ தளத்தில் எழுதியுள்ளார்: “இலங்கையில் தமிழர்களின் உரிமைகள் பிரச்சினையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடூரத்தனம் மிகவும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அது போலவே, பாலத்தீன விவகாரத்திலும் (அல்லது அவர்களின் உரிமைகள் பிரச்சினையிலும்) தீவிரவாதிகள் காரணமாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஹமாஸின் கொடூரத்தனம் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.”



“அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலை உலகம் ஒருபோதும் மன்னிக்காது” என்று அவர் எழுதுகிறார்.

மறுபுறம், லிபியா, ஜோர்டான் மற்றும் மால்டாவுக்கான முன்னாள் இந்திய தூதர் அனில் திரிகுணாயத் கூறுகையில், “ஹமாஸின் சமீபத்திய தாக்குதலுக்கு பாலத்தீன விவகாரத்திலோ அல்லது அவர்களின் உரிமைகள் மீதோ எந்த தாக்கமும் ஏற்படாது” என்று கூறினார்.

‘மத்திய கிழக்கு முழுவதும், ஐரோப்பாவில், கனடா போன்ற நாடுகளில் பாலத்தீனத்திற்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. இதற்கு அர்த்தம் பாலத்தீனத்திற்கு மக்களிடையே ஆதரவு இருக்கிறது” என்று அவர் கூறுகிறார்.

இஸ்ரேல்-பாலத்தீன மோதலில் சமீபத்திய வன்முறை குறித்து பேசிய பேராசிரியர் ஏ.கே.பாஷா, “இப்பகுதியில் இரத்தக்களரி நீண்ட காலமாக நடந்து வருகிறது. இரு தரப்பிலும் இறந்தவர்களின் எண்ணிக்கையை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்” என்று கூறினார்.

மத்திய கிழக்கு-இந்தியா உரையாடலுக்கான மையத்தின் இயக்குநரான பேராசிரியர் ஏ.கே.பாஷா, ஹமாஸ் தாக்குதலுக்குப் பிறகு இஸ்ரேலில் இருந்து வரும் படங்கள் பாலத்தீனர்களுக்கான உணர்வுகளில் “சிறிய தாக்கத்தை ஏற்படுத்தும்” என்று நம்புகிறார், ஆனால் இஸ்ரேல் என்ன செய்கிறது அல்லது நிலத் தாக்குதல்களை நடத்தப் போகிறது என்பது ‘இஸ்ரேலுக்கான உணர்வுகளை முற்றிலுமாக அழித்துவிடும்” என்றார்.

### ஹமாஸ் தாக்குதல்களின் விளைவு

ஹமாஸின் தாக்குதல்களின் விளைவாக, பாலத்தீனம் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து பெறும் நிதி உதவி குறித்து “மறுபரிசீலனை” செய்யப்படுவதாக அறிக்கைகள் கூறுகின்றன.

பாலத்தீனத்திற்கு இந்த நிதி உதவி மிகவும் முக்கியமானது என்பது குறிப்பிடத்தக்கது.

பாலத்தீனத்திற்கான ஐரோப்பிய யூனியனின் நிதி உதவி எந்த வகையிலும் இஸ்ரேலைத் தாக்கப் பயன்பட்டு விடக்கூடாது என்பதற்காக நிதியுதவி குறித்து உடனடியாக மறுபரிசீலனை செய்யப்படும் என ஐரோப்பிய ஆணையம் தெரிவித்துள்ளது.

ஹமாஸின் தாக்குதல்களுக்கு பதிலளித்து, ஆஸ்திரியா பாலத்தீனத்திற்கான சுமார் 20 மில்லியன் யூரோ நிதி உதவியை நிறுத்துவதாக தெரிவித்துள்ளது.



பாலத்தீனத்திற்கான பொருளாதார உதவி குறித்து ஜெர்மனியிலும் விவாதம் நடந்து வருகிறது, அங்கு ஒரு அமைச்சர் இஸ்ரேல் மீதான தாக்குதலுக்குப் பிறகு, “பாலத்தீனப் பகுதிகளுடன் எங்கள் முழு உறவும் மறுபரிசீலனை செய்யப்படும்” என்று கூறினார்.

பல பெரிய ஹாலிவுட் நட்சத்திரங்கள் பகிரங்கமாக இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆயுதங்களை அனுப்பத் தொடங்கியுள்ளது, வேறு எந்த நாடு அல்லது குழுவும் இஸ்ரேலைத் தாக்க வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளாதபடி, போர் விமானங்கள் மற்றும் கடற்படை போர்க் கப்பல்களை அப்பகுதிக்கு அனுப்பி வருகிறது.

காசாவை ஆளும் ஹமாஸிற்கு தனது மக்களிடம் என்ன பொறுப்பு உள்ளது மற்றும் மக்கள் மீதான பொருளாதார பாதிப்பு அல்லது இஸ்ரேலிய தாக்குதலுக்கு யார் பொறுப்பு ஏற்பார் என்பது குறித்த கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

### இஸ்ரேல் பாலத்தீன் விவகாரத்தின் வரலாறு

இஸ்ரேலுக்கும் பாலத்தீனத்திற்கும் இடையிலான இந்த நீண்டகால சண்டை நிலத்திற்கானது.

இஸ்ரேலும் பாலத்தீனமும் அமைதியுடன் வாழ வேண்டிய இரண்டு தனி நாடுகள் என்று சர்வதேச சமூகம் பேசுகிறது, ஆனால் அனைத்து முயற்சிகளையும் தாண்டி இது நடக்கவில்லை.

பாலத்தீனர்கள், இஸ்ரேல் பல தசாப்தங்களாக தங்களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்தி வருவதாகவும், இஸ்ரேல் தொடர்ந்து தங்கள் நிலத்தை ஆக்கிரமித்து வருவதாகவும் கூறுகின்றனர்.

இஸ்ரேல் இன்னும் மேற்கு கரை பகுதியை ஆக்கிரமித்துள்ளது, ஆனால் காசாவை விட்டு வெளியேறிவிட்டது.

கிழக்கு ஜெருசலேம், காசா மற்றும் மேற்கு கரை பகுதிகளில் வசிக்கும் இஸ்ரேலியர்களுக்கும் பாலத்தீனர்களுக்கும் இடையே பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

(16ம் பக்கம் பார்க்க)

# தென்கிழக்குப் பல்கலையில் ஊழியர் பணிப்புறக்கணிப்பு!

அம்பாறை, ஒக். 14

பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கங்கள், கல்விசார் ஆதரவு சங்கங்கள் மற்றும் அரசியல் சங்கங்களின் கூட்டுக்குழுவின் ஏகமனதான தீர்மானத்துக்கமைவாக ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன் தினம் புதன்கிழமை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்விசாரா ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜூடீன் தலைமையில், ஒரு மணித்தியால அடையாள பணிப்பறக்கணிப்பு போராட்டம் இடம்பெற்றது. பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்திலும் சம்மாந்துறையில் அமைந்துள்ள பிரயோக விஞ்ஞானபீடத்திலும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. (அ)





# பருவ மழை பாதிப்பை தடுக்க முன் ஏற்பாடுகள்

மட்டக்களப்பு, ஒக். 14

பருவ மழைக்காலத்திற்குரிய முன்னேற்பாடு நடவடிக்கைகளை காத்தான்குடி நகரசபை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக வடிகாண்கள், தோணா பகுதிகளில் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டன.

இதன் மூலம் வெள்ளநீர் மழை காலத்தில் வெள்ள நீர் தங்கு தடைகளின்றி வடிந்தோடிச்செய்ய ஏதுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

# ஹெரோயினுடன் கைதானவருக்கு விளக்க மறியல்

அக்கரைப்பற்று, ஒக். 14

ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட நபரை 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார். அக்கரைப்பற்று பிரதேசத்தில் 18 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒரு வர் கைது செய்யப்பட்டார்.

இச்சந்தேக நபர் ஹெரோயின் வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் நபரை கைது செய்து நேற்று முன் தினம் வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே இச்சந்தேக நபருக்கு இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரனைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பாலத்தீனம் கனவை ஹமாஸ் தாக்குதல்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

காசா பகுதி பாலத்தீன ஆயுதக்குழுவான ஹமாஸால் ஆளப்படுகிறது.

கடந்த காலங்களில் ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கு இடையே பல போர்கள் நடந்துள்ளன. ஆயுதங்கள் ஹமாஸைச் சென்றடையாதபடி இஸ்ரேலும் எகிப்தும் காசாவின் எல்லைகளை கடுமையாகக் கட்டுப்படுத்துகின்றன, ஆனால் இது பாலத்தீனர்களுக்கு பல பிரச்னைகளை ஏற்படுத்துகிறது.

விரிவடையும் இஸ்ரேலியர்களின் குடியேற்றங்களும் பாலத்தீனயர்களின் கோபத்திற்கான ஒரு காரணமாகும்.

லிபியா, ஜோர்டான் மற்றும் மால்டாவிற்கான இந்தியாவின் முன்னாள் தூதர் அனில் திரிகுணாயத் கூறுகையில், ‘பாலத்தீன பிரச்னை தீர்க்கப்படும் வரை இந்த பிரச்னை தொடரும். சர்வதேச சமூகம் இரு தரப்பும் ஒன்றாக வாழ வழி கண்டுபிடிக்க வேண்டும்” என்று கூறினார்.

இந்தியா-மேற்கு ஆசிய உரையாடலுக்கான மையத்தின் இயக்குநர் பேராசிரியர் ஏ.கே.பாஷா கூறுகையில், “பாலத்தீன விவகாரம் உணர்ச்சிப்பூர்வமான பிரச்னையாக மாறிவிட்டது. உலகம் முழுவதும் மட்டுமல்ல, அரபு நாடுகளிலும், பாலத்தீன மக்களிடையே மட்டுமல்ல, முஸ்லிம்களிடையே மட்டுமல்ல, காலனியாதிக்கம் மற்றும் ஏகாதிபத்தியத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில், பாலத்தீனர்களுக்கான ஆதரவு மெல்ல அதிகரித்து வருகிறது” என்றார்.

ஆனால், ‘தி இந்து’ பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் மாலினி பர்த்தசாரதி இந்த கருத்துக்கு உடன்படவில்லை.

“எந்த ஒரு இன மற்றும் பிராந்திய மோதலையும் வன்முறையால் தீர்க்க முடியாது. குற்றமற்ற மக்கள் மீதான கொடூரமான தாக்குதல்கள் இந்த மோதலை மட்டுமே அதிகரிக்கும்” என்று அவர் கூறுகிறார்.

இது இஸ்ரேலின் 9-11 தருணம் என்றும் பேச்சுவார்த்தை மேசைக்கு ஒருபோதும் வராது என்றும் இஸ்ரேல் கூறியது.

“மீண்டும் வந்து பாலத்தீன மக்களிடம் பேரழிவு தரும் தாக்கத்தை ஏற்படுத்தும் பழி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும். பின்னர் இரு தரப்பிலும் உள்ள தீவிரவாதிகள் முன்னுக்கு வருவார்கள், இராணுவ விருப்பம் மேலோங்கும்.”





